பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 18 திங்கட்கிழமை (03.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 340

# தீர்வு யோசனையை வெளியிட அரசுக்கு இந்தியா காலக்கெடு!

## இது குறித்து மஹிந்தா புதுடில்லியில் பேசுவார்

கொழும்பு, நவம்பர் 03

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சாத்தியம் என்று ஒப்புக்கொண்டிருக்கும் இலங்கை அரசு, அது தொடர்பான தனது தீர்வுத் திட்டத்தை குறுகிய காலத்துக்குள் - பெரும்பாலும் அடுத்த மூன்று மாதத்துக்குள் - வெளியிட்டு, அதனை முன்னெடுப்பது தொடர்பான முயற்சிகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துக் காலக்கெடு விதித்திருக்கின்றது இந்தியா.

நம்பத்தகுந்த வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டன.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சர்ச்சை இந்தியாவிலும் அரசியல் நெருக்கடிகளை உருவாக்கியுள்ள பின்னணியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக அவரது சகோதரரும், ஆலோசகரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷ பேச்சு நடத்துவதற்கு கடந்த மாத இறுதியில் புதுடில்லிக்குச் சென்றிருந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் குழு பேச்சாளரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

அம்பாறை, நவ.03

அம்பாறை, கல்முனை, மருதமுனை இக்கார் வீதியில் உள்ள பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளரான அசாத் மொலானாவின் வீட்டின் மீது நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்வே- கல்விச்சுடர்

க.பொ.த.(சாதாரண தர) பரீட்சைக்குரிய

English Language

கோப்பாய் மகாவித்தியாலய ஆசிரியை

திருமதி எம்.கே.எஸ் முத்துக்குமாரசாமி தயாரித்தது

நாளை - வரலாறு - 1

## ஜனாதிபதி தலைமையில் அனைத்துக் கட்சி மாநாடு; இந்தியாவின் பார்வையாளர் பங்குபற்றுவார்

கொழும்பு, நவ.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் 10ஆம் திகதி இந்தியாவுக்குப் போகும் முன்னர் அவர் தலைமையில், அனைத்துக் கட்சி மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் அந்நாட்டுப் பிரதிநிதி ஒருவர் பார்வையாளராகக் கலந்துகொள்வார் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் அண்மையில் இந்தியா சென்றபோது, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இவ்விடயம் குறித்து பஸிலிடம் வினவினார் என்றும்; அப்போதே இந்தியப் பிரதிநிதி ஒருவர் அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து இணக்கம் காணப்பட்டது எனவும் அறியமுடிந்தது.

இன்னும் ஓரிரு தினங்களில் இனப்பிரச்சினை தீர்வு குறித்த அனைத்துக் கட்சி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு உணவு அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசுடன் இந்தியா ஆலோசனை

கொழும்பு, நவ.3

வன்னியில் மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு புதுடில்லியில் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக இந்தியாவும் இலங்கையும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளன என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேரடி மோதல்!

கொழும்பு, நவ.3

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அணியினருக்கும் படைத்தரப்புக்கும் இடையில் நேற்றுக் காலை 7.50 மணியளவில் நேரடிச் சமர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்களை அழிக்க ரஷ்யா, செக். நாடுகள் உதவும்

கொழும்பு, நவ. 3

விடுதலைப்புலிகளின் இலகு ரக சிறிய விமானங்களை அழிப்பதற்கு, ரஷ்யாவும், செக்.குடியரசும் கொழும்பு அரசுக்கு உதவ முன்வந்துள்ளன.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தஅரச நிலைகள் மீது தாக்குதல்களை அதிகரித்து வருகின்றன.

அதனை அடுத்து அந்த விமானங்களை அழிக்க உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் இலங்கை உதவி கேட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் தரித்துள்ள இடத்தைக் கண்டுபிடித்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் சனியன்று மோதல்

கொழும்பு, நவ.3

யாழ்ப்பாணம், முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை படையினர் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று பாதுகாப்புத்தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் பதுங்கு குழி ஒன்றைப் படையினர் மீட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## இரணை மடுப் பகுதியில் நேற்றுக் குண்டுவீச்சு

கொழும்பு, நவ. 3

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு காட்டுப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் மீது நேற்றுக்காலை ஜெட் விமானம் தாக்குதலை மேற்கொண்டது. இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந் தது எனப் பாதுகாப்புத்தரப்பு அறிவித்துள்ளது. (அ-01)

## கொழும்பில் தமிழர்கள் பொலிஸ் பதிவு; இலங்கையிடம் இந்தியா ஆட்சேபம்!

கொழும்பு, நவ. 03

கொழும்பிலுள்ள வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பதிவு செய்யும் நடைமுறை குறித்து இந்தியா தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமீபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதியாகப் புதுடில்லி சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவிடம், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பில் தமிழர்களை வேறுபடுத்திப் பதியும் நடைமுறைக்கு இந்திய அதிகாரிகள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாய்ப் பகுதியில் கிளைமோர்த் தாக்குதல்

திருகோணமலை, நவ.03

கந்தளாய்ப் பகுதியில் உள்ள சிங்களப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் படைச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிப்பாய், அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் கூறப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் மேலதிகத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். (அ-சி)

## கல்முனையில் நேற்றிரவு மூவர் சுட்டுக்கொலை

கொழும்பு, நவ. 03

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுந்தையடிப்பகுதியில் நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் உள்ள கடற்கரை ஒன்றுக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும், உயிரிழந்தவர்களை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லைஎன்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (அ-சி)

## தமிழகப் போராட்டங்களை ஒளிபரப்புவதற்குத் தடை?

கொழும்பு, நவ. 03

இலங்கை நிலைவரம் குறித்து தமிழ்நாட்டில் காணப்படும் உணர்வலைகளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகளை மீள் ஒளிபரப்புச் செய்யவேண்டாமென இலங்கையிலுள்ள செய்மதித் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்த தமது கவலையையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் விதத்தில் தமிழ் நாட்டில் அரசியல்வாதிகள், கலைஞர்கள், பொதுமக்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு நிறுவனங்கள் மூலமே ஈழத்தமிழருக்கான நிவாரண உதவி

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு கருணாநிதி பதில்

சென்னை, நவ. 3

ஈழத் தமிழர்களுக்காகச் சேகரிக்கப்படும் நிவாரணப் பொருள்கள், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா. மன்றம் போன்ற தொண்டு நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படும் - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாது!

## தொழிற்சங்கங்கள் மீண்டும் போர்க்கொடி

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 300 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் இத் தொகை போதாது என்றும் இதைவிட அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

"ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் போராட்டம் நடத்தி வருவதன் காரணமாக எமது போராட்டத்தை முடக்கும் நோக்கில் அரசு அநியாயமான முறையில் எமது சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

எமது சம்பள அதிகரிப்புக்கென அரசால் நாடாளுமன்றில் சமர்ப்பிக் கப்படவுள்ள 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செல வுத்திட்டத்தில் வெறும் 300 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஆனால் இத்தொகை சம்பள அதிகரிப்புக்குப் போதாது. 2007 ஆம் ஆண்டு கல்வி அமைச்சால் முன்வைக்கப்பட்ட இக்கால சம்பள அதிகரிப்பு யோசனையாவது நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாம் அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்.

அந்த யோசனையில் 700 கோடி ரூபா சம்பள அதிகரிப்புக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த யோசனை ஓர் இடைக்கால யோசனை என்பதால் நாம் அந்த யோசனையை ஏற்கிறோம்.

ஆகக் குறைந்தது அந்த யோசனையையாவது நடைமுறைப்படுத்தவேண்டும் என்று நாம் அரசிடம் கேட்டுக் கொள்கிறோம்.

மாறாக வரவு - செலவுத் திட்டத்தில் இப்போது சம்பள அதிகரிப்புக்கு 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதை எம்மால் ஏற்க முடியாது - என்றார். (அ-சி)

## சிவத்தமிழ்ச் செல்வியின் அஸ்தியை கங்கையில் கரைக்க ஏற்பாடு

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் அஸ்தியை வட இந்திய நகரான காசியில் இடம் பெறும் விசேட கிரியைகளை அடுத்து கங்கை நதியில் கரைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த துறவி தொண்டுநாத சுவாமிகளிடம் அஸ்தி கையளிக்கப்பட்டு கங்கையில் கரைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் தகவலைத் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (202-111)


## தவறிவிட்டது

கனகசபை இராஜலிங்கம் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், இராணுவ அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், வெளிநாட்டு சாரதி அனுமதிப் பத்திரம், கணக்குப் பதிவேடுகள்(4), கடைத்திறப்புக் கோர்வை, மின்சாரக்கட்டணப் பற்றுச்சீட்டுகள் என்பன அடங்கிய கறுப்பு நிறப்பை இலங்கை நாயகி அம்மன் கோவிலுக்கும், கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-

T.P:- 021 222 7258
021 222 3559
021 222 6615

"ஸ்ரீ முருகன் கனக சிற்பாலயம்"
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு.


## பட்டமேற்படிப்பு டிப்ளோமா விண்ணப்பப்படிவங்கள்

யாழ்ப்பாணம், நவ.3

இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டமேற்கல்வி டிப்ளோமா 2009/2010 ஆம் ஆண்டிற்கான விண்ணப்ப படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ப)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், நவ.3

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளத்தினால் இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் சுற்றுப்போட்டியில் யாழ்.வலயத்துக்கான 15 பிரிவினருக்கான இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித பத்திரிசிரியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் சென்.ஜேம்ஸ் ம.வியும் மோதுகின்றன.

நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் சென்.சாள்ஸை 3:0 என்ற கோல் கணக்கில் வென்ற யாழ். மத்திய கல்லூரியும் -

சென்.ஜோன்ஸை 2:0 என்ற கோல் கணக்கில் வென்ற சென்.ஜேம்ஸ் ம.வியும் - இறுதியாட்டத்தில் மோதுகின்றன. (1)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை புருஷோத்மன்



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்.பல்கலைக் கழக மாணவனாகிய செல்லத்துரை புருஷோத்மன் நேற்றுமுன்தினம் (01.11.2008) சனிக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஸ்ரீதேவியின் அன்பு மகனும், சஜிதாவின் அன்புச் சகோதரனும், மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியினரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கைதடி வடக்கு. (79621) நா.மாணிக்கம்.

### யோகராஜா விமலாதேவி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா விமலாதேவி நேற்று (02.11.2008) ஞாயிற்றுகிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்- நாகம்மாவின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகளும் ஓய்வுபெற்ற மக்கள் வங்கி ஊழியர் யோகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணபாலசிங்கம், நல்லநாயகி மற்றும் குகமூர்த்தி சண்முகராஜா, தயாநிதி, தவபாலன், சிவம்,ஸ்ரீ, கௌரி, லீலா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாதேவி, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் பூரணம், பரமேஸ்வரி, செல்வராஜா ஆகியோரின் மைத்துனியும் கேமலதா, பவதாஸ், கமலரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரபாகரன், சசிகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் சதுஸன், மதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2008) திங்கட்கிழமை ஒரு மணிக்கு இலக்கம் 110, ஆனந்தம் வடலி வீதியில் அமைந்து இருக்கும் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

110, ஆனந்தம்வடலி வீதி, தகவல்:
அரியாலை. (79622) யோகராஜா (கணவர்).


# மங்களகரமான திறப்புவிழா

NSD
Sree Nathiya
Digital Colour Lab
VIDEO,STUDIO & PHOTO PRINTING

- Print Size 03R up to 10x15
- Digital Media to Print (Floppy, Cd, Zip, Flash Memory, USB Card)
- Old Photograph Restoration
- Calender & Greeting Card Printing
- High Quality Image From Traditional & Digital Media
- Image Interlligence Technology
- Index / Framed Prints & Decorative Prints
- Over / Under exposure Correction
- Digital Album Designing & Album Binding

Laxan Plaza Bulding, No. 108A,Navalar Road, Jaffna
Tel: 021: 2228412

இன்று (03.11.2008) திங்கட்கிழமை
மு.ப. 9.45 - 10.40 வரை உள்ள சுப வேளையில்
சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப்
& ஸ்ருடியோ நிறுவனத்தை
செல்வரத்தினம் நிமால்
(Business unit Head - HAYLEYS Consumer)
அவர்கள் திறந்து வைக்கும் இந்த நிகழ்வில் HAYLEYS Consumer நிறுவனத்தின் பிரதிநிதிகளான
திரு.S.U.வீரக்கொடி (Technical Executive),
ருக்சான்குமார (Sales Executive) ஆகியோரும் கலந்து சிறப்பிப்பார்கள்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 108 A,
லக்சன் பிளாசா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 8412

தங்கள் நல்வரவை நாடும்
சிறி நதியா நகைமாளிகை,
சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப் & ஸ்ருடியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட வந்துள்ள புதிய அவசரகால சட்ட விதிகள்

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பார்கள்.

கெட்டுப் போக முடிவு செய்தவன் கேட்டையே நாடுவான். அவனைத் திருத்தவே முடியாது.

அந்த நிலைமைதான், இலங்கையில் ஊடக சுதந்திரத்தைக் கெட்டழியச் செய்யும் எண்ணத்திலும் இலக்கிலும் உள்ள அதிகார வர்க்கத்தின் போக்கிலும் தென்படுகிறது. அவர்கள் திருந்தவே மாட்டார்கள் போலும்.

ஊடகப் பாதுகாப்பு இயக்கமான 'ஊடக குறியீட்டு பிரசார அமைப்பு' கடந்த வருடம் தான் நடத்திய ஆய்வின் பின்னர், 'உலகில் பத்திரிகையாளர்கள் பணிபுரிவதற்கு மிகவும் பயங்கரமான இடம்' என்று இலங்கையை வர்ணித்திருந்தது. உலகில் ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகியவற்றுக்கு அடுத்து ஊடகவியலாளர்கள் கடமையாற்றுவதற்கு மிகமிக மோசமான நாடு என்ற (அவப்) பெயரை இலங்கை சம்பாதித்துக்கொள்ள வழி செய்தது நமது 'மஹிந்த சிந்தனை' ஆட்சி முறைமை.

இதன் பின்னர் ஓராண்டு கழித்து - இவ்வருடத்தில் - 'எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு' என்ற பிரான்ஸைத் தளமாகக் கொண்ட நிறுவனம் நடத்திய குறியீட்டு ஆய்வுகளின்படி ஊடகசுதந்திரம் பேணும் நாடுகளின் வரிசையில் கடைசி பத்துக்குள் இலங்கைக்கும் இடம் கிடைத்திருக்கின்றது.

சுமார் பத்து நாள்ளகளுக்கு முன்னர் வெளியான இந்தக் குறியீட்டு அளவுகளின்படி, 173 நாடுகளில் 165 ஆவது இடத்திலேயே இலங்கை உள்ளது என்பது அம்பலமாகியுள்ளது. சீனா, ஈரான், கியூபா, துருக்மெனிஸ்தான், வடகொரியா, எரித்திரியா ஆகியவற்றுடன் கடைசி வரிசையை இலங்கை பெற்றிருக்கின்றது.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்ன வென்றால் ஏற்கனவே மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை நசுக்குதல் போன்றவற்றுக்காகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டுவந்த ஈராக், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம், சோமாலியா ஆகியவற்றை எல்லாம் விட இலங்கையில் ஊடக சுதந்திரம் கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டது என்ற கணிப்பீட்டுப் பெறுபேறுதான்.

புலிகளை அழித்தல், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தல், நாட்டின் இறைமையை நிலைநிறுத்தல் என்ற பெயர்களில் ஊடகங்களைக் கட்டுப்படுத்தி, அடக்கி, கெடுபிடிக்கு உள்ளாக்கி ஊடக சுதந்திரத்தை மீறும் பல்வேறு அத்துமீறல் செயற்பாடுகளை ஆட்சிப்பீடம் அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றது.

இதனால் ஊடக சுதந்திரத்தை மறுக்கும் நாடுகளின் வரிசையில் உயர்வான இடம் இலங்கைக்குக் கிடைத்து வருகின்றது.

இந்தச் செயற்பாட்டு ஒழுங்கில், இப்போது அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் ஊடகங்களின் கழுத்தை நெரிக்கும் புதிய சட்ட ஒழுங்கு விதிகள் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களை - தொலைக்காட்சிச் சேவைகளை - கட்டுப்படுத்தி, தமக்கு இசைவாகச் செயற்படவைக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

தொலைக்காட்சிச்சேவைகளின் வாய்களுக்குப் பூட்டுப் போட்டு அடைக்கும் - 'தணிக்கை' போன்ற கடும்விதி முறைகளைக் கொண்ட - வர்த்தமானி அறிவித்தலை, அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் ஊடக அமைச்சர் கடந்த 10 ஆம் திகதி வெளியிட்டிருக்கின்றார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொது நலன் விவகாரத்தில் ஈடுபாடு உள்ள பல அமைப்புகள் ஒன்று சேர்ந்து முன்வந்திருக்கின்றன.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய திருக்கூத்துகளைக் கட்டுப்படுத்துவதில் உயர்நீதிமன்றம் வலு கரிசனையாகவும் கவனமாகவும் உள்ளது என்பது தெளிவு. அதனை உறுதிப்படுத்தும் பல தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் அது அண்மைக் காலத்தில் வெளியிட்டு வருகின்றது என்பதும் தெரிந்த விடயமே.

1997 இலும் இதேபோன்று சந்திரிகா அரசினால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்ட விதி உயர்நீதிமன்றத்தினால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில், இலத்திரனியல் ஊடகங்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தற்போதைய கட்டுப்பாட்டு விதிகளுக்கும் அதே நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது, எப்படியென்றாலும் இத்தகைய ஊடக அடக்கு முறை நடவடிக்கைகளுக்கு எதிராக - கருத்துச் சுதந்திரத்துக்கு ஆப்பு வைக்கும் அதிகார அராஜகத்துக்கு எதிராக - அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் கிளர்ந்தெழுவது அத்தியாவசியமானதாகும்.

இலத்திரனியல் ஊடகங்களை - குறிப்பாக, மக்களை இலகுவாகச் சென்றடைவதும், அதிக தாக்கம் கூடியதுமான தொலைக்காட்சிச் சேவையை - அடக்க முற்படும் இந்த நடவடிக்கை கருத்து வெளியிடும் மக்களின் பிரதான சுதந்திரத்திற்கு அடியோடு இழுக்கு ஏற்படுத்தும் எத்தனமாகும். இதனை அனுமதிப்பது ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையையே சிதைத்துவிடும்.

# வான் தாக்குதலுக்கு புலி விமானங்கள் மேற்கொண்ட புதிய நுட்ப முறைகள்

'சண்டே ரைம்ஸ்'-களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 02.11.2008 அன்று அப் பத்திரிகையில் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் இருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது



கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் களனிதிஸ்ஸ மின்நிலையத்தைத் தாக்குவதற்கு புலிகள் பயன்படுத்திய ஸ்லிம்-z143 விமானம், மோதரையில் களனி ஆற்றுக்கு மேலாகக் கிழக்கு நோக்கிய திசையில் களனிப் பாலம் வரை பறந்தது. கண்டி-நீர்கொழும்பு வீதிகளை இணைக்கும் இடமாகும் இது. அவ் விடத்தில் வானில் ஒரு வட்ட மடித்து களனி திஸ்ஸ மின் நிலையத்தின் மேற்பரப் புக்கு வந்தது. இரவு 11.46 மணிக்கு மூன்று குண்டுகளை அது வீசியது.

தரையிலிருந்து நடத்தப்படும் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக மிகக் கவனமாக புலிகள் திட்டமிட்டிருந்துள்ளார்கள் என்பதை இந்த செயற்பாடு காட்டியது.

குண்டுவீச்சு இடம்பெறுவதற்கு குறைந்தது 10 நிமிடங்களுக்கு முன்னர் மீரிகமவில் நிறுவப்பட்டுள்ள சீன



புலிகளின் Z -143 ரக விமானம்

3D ரக ராடரும் கட்டுநாயக்காவில் நிறுவப்பட்டுள்ள இந்திய 2D ராடரும் ஊடுருவிய புலிகளின் விமானங்களைத் தங்கள் திரைகளில் காட்டத் தவறிவிட்டன.

இதற்குக் காரணம் தாக்குதல் மேற்கொண்ட விமானம் தனது இலக்கு நோக்கிய பயணத்தில் பறக்கும் உயரத்தைக் குறைத்துக்கொண்டு மரங்களின் உயரத்தில் பறந்துள்ளமையாகும். ராடர் திரையிலிருந்து அது மறைந்ததின் மர்மம் இதுதான்.

### சுட்டுவீழ்த்த ஏன் முடியவில்லை?

கெரில்லா விமானங்களை நேரடியாகச் சுட்டுத்தள்ளுவதற்கு மின்நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள விமான எதிர்ப்பு இயந்திர சாதனங்கள் செயற்படுத்தப்படாமல் போனமைக்கு காரணம் புரியாமல் இருக்கின்றது. இயந்திரங்கள் செயற்படுவதற்கான சுற்றுவட்டத்துக்குள் அது வரவில்லையென்று ஒரு காரணம் கூறப்படுகின்றது.

மின்நிலையத்தின் ஒரு பகுதியில் தீப்பற்றிக்கொண்டது. இதை அணைக்க தீயணைக்கும் படையினருக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் பிடித்தது. சக்தி வளங்கள் மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளர் இதுபற்றி கூறுகையில், "காற்றைக் குளிரவைக்கும் ஒரு விசிறியும், ஆவிரோர்பைன் அமைப்பின் கட்டுப்பாட்டு பகுதியும் சேதமடைந்து விட்டன. மின் நிலையத்தின் செயற்பாட்டை இது பாதிக்காது. திருத்த வேலைகளுக்கு 100 மில்லியன் ரூபாய்க்கு குறைவாகவே செலவாகும். திருத்தங்கள் முடிவடைவதற்கு ஆறுமாதங்கள் வரை எடுக்கும்" என்றார். ஆனால் திருத்த வேலைகளுக்கு அதற்கு மேற்பட்ட தொகை செலவாகலாம் என்று பெயர் வெளியிட விரும்பாத முதுநிலை பொறியியலாளர் ஒருவர் சொன்னார்.

கட்டுநாயக்க விமானத்தளத்திலிருந்த சீன தயாரிப்பான எவ்-7 வழிமறிக்கும் விமானங்கள் இரண்டு, மின் நிலையத்தின்மீது குண்டு வீசிய விமானத்தைப் பின்தொடர்ந்து தாக்கி அழிக்க அனுப்பப்பட்டன.

## துரத்திச் சென்ற சீன ரக விமானங்கள் வெறுங்கையுடன் திரும்பிய பரிதாபம்

மற்றைய விமானம் இந்த அளவில் வன்னிக்குத் திரும்பிப் போய்விட்டிருந்தது. இவ்வாறு மேல் எழும் புகையில் ஒரு விமானத் தின் ஒரு சிறு அமைப்புக் கழன்று நிலத்தில் விழுந்து விட்டது. எனவே தொடர்ந்து செல்லாமல் அது திரும்பி விட்டது. பின்னர் வேறு ஒரு எவ்-7 விமானத்தை அந்த விமானி எடுத்துச் சென்றார்.

தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட புலிகளின் விமானம் தான் வந்த பாதையிலேயே திரும்பிப் பறந்து சென்றது. எதிர்த்துத் தாக்குவதற்குப் புறப்பட்ட எவ்-7 விமானம் புத்தளத்துக்கு மேலாக அது பறந்து செல்வதைக் கண்டுள்ளது. மூன்று தடவைகளுக்கு மேலாக விமானி, எதிரி விமானத்தைத் தனது ராடர் திரையில் கண்டுள்ளார் என்று விமானப் படையினர் தெரிவித்தனர். ஆனால் தனது தன்னியக்க தாக்குதல் கருவியை இயக்க வைக்கும் வட்டத்துக்குள் அவர் இருக்கவில்லை. எனவே இரண்டாவது z-143 விமானமும் முல்லைத்தீவுப் பகுதிக்குத் திரும்பியது.



F-7 ரக விமானம்

### புலிகளின் புதிய கண்டுபிடிப்பு

தமது விமானங்கள் உஷ்ண அலைகளை வெளியிடுவதைத் தவிர்க்கும் முறைகளை புலிகள் கண்டு பிடித்திருக்க வேண்டும் என்றும், அதனாலேயே அவைகள் தப்பிச் செல்ல முடிந்துள்ளதென்றும் விமானப் படையினர் கருதுகிறார்கள். விமான உஷ்ண அலைகளைத் தவிர்க்கும் பொறிகளை புலிகள் வாங்கிப் பொருத்திக் கொண்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடத்திய விமானங்கள் இறங்கிய இடம் வரைக்கும் அவைகள் ஏன் பின்தொடரப்படவில்லை என்பது விளக்கமில்லாமல் இருக்கின்றது. இது நடந்திருந்தால் அவை எங்கிருந்து புறப்பட்டன என்பதும் தெளிவாகத் தெரிந்திருக்கும்.

### வீடியோவின் பதிவு

கொழும்பை நோக்கிப் பறந்து குண்டுவீசிவிட்டுத் திரும்பிச் சென்ற விமானத்தின் செயற்பாடுகளை தெளிவாக கடற்படையினர் வீடியோ படம் எடுத்து வைத்துள்ளனர். அந்த விமானத்தைத் துரத்திச் சென்ற எவ்-7 விமானத்தின் பதிவுகளும் அவர்களிடம் இருக்கின்றன.

விமானப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வஸந்தகரணகொட இந்த வீடியோ படங்களை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு கடந்த புதன்கிழமை திரையிட்டுக் காட்டியுள்ளார்.

புலிகளின் விமானங்கள் நடத்தியுள்ள தாக்குதல்களையடுத்து முக்கியமான சிலதகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலாவது கெரில்லா விமானம் தனது பணியை முடித்துக்கொண்டு, தளத்துக்குத் திரும்புவதற்கு 45 நிமிடங்கள் சென்றுள்ளது இரண்டாவது விமானம் கொழும் புக்கு வந்து மின் நிலையத்தின் மீது குண்டு வீசுவதற்கு 46 நிமிடங்கள் எடுத்துக் கொண்டுள்ளது. திரும்புவதற்கும் அதேஅளவு நேரம் எடுத்திருக்கும். இவ்வாறு எட்டாவது தடவையாகவும் தாக்குதல் நடத்திவிட்டு அவை திரும்பிச் சென்றுள்ளன. எனவே இது நிச்சயமாக அரசாங்கத் தலைவர்களை திக்குமுக்காடச் செய்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### ஆறுதல் பெருமூச்சு

இலங்கை மின்சாரசபையின் உயர் பொறியியலாளர்கள் சிலர் ஆறுதல் பெருமூச்சுவிட்டுக் கொண்டார்கள். புலிகளின் விமானத்தைத் துரத்திச் சென்ற எவ்-7 விமானங்கள் களனி திஸ்ஸ மின்நிலையத்துக்கு மேலாக பறக்காததே அவர்கள் ஆறுதல் அடைவதற்குக் காரணம். உஷ்ண அலையை நாடிச் செல்லும் தரையிலிருந்து விண்ணுக்கு செலுத்தப்படும் ஏவுகணையொன்று வீசப்பட்டிருந்தால் மின்நிலையத்திலுள்ள அதிக உஷ்ணத்தை வெளிப்படுத்தும் பகுதியினால் இழுக்கப்பட்டு பெரும் அனர்த்தத்தை அது விளைவித்திருக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். புலிகளின் பிரதான [illegible]படைத் தளமாக இருந்து வந்[illegible]ள நாச்சிக்குடாப் பகுதியை அரச படைகள் கைப்பற்றின என அறிவித்த சமயத்தில் புலிகளின் ஒன்பதாவது விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

களனிதிஸ்ஸ மின்நிலையத்தை மட்டுமன்றி, கொழும்பில் பல முக்கிய நிலைகளைத் தாக்குவதற்குப் புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது சமீப காலத்தில் தெரியவந்துள்ளது.

சமீபத்தில் வெள்ளவத்தைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட புலிகளின் உறுப்பினர் என்று கருதப்படும் வாலிபர், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கரும்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அரசியல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசனின் தலைமையில் இந்த அமைப்பு இயங்குகிறது. அரசியல் இலக்குகளைத் தாக்குவதே இந்த அமைப்பின் நோக்கம். பிடிபட்ட வாலிபரின் இலக்கு ஈ.பி.டி.பி அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவாம். அவரைக் கொலை செய்வதே இவரின் நோக்கமாக இருந்துள்ளதாம்.

நாடு முழுவதும், குறிப்பாகக் கொழும்பில் வான் பரப்பின் பாதுகாப்பு ஸ்திரமாக இருப்பதாக விமானப்படை அதிகாரிகள் அடிக்கடி கூறிவந்துள்ள நிலையில் இரண்டு கெரில்லா விமானங்கள் வெற்றிகரமாக வான்பரப்புக்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தி விட்டுத் திரும்பிச் சென்றுள்ளன.

புலிகள் மீண்டும் முயற்சித்தால் நல்ல பாடம் படிப்பார்கள் என்று விமானப் படையினர் அறிவித்திருந்த நிலையில் இத்தனையும் நடந்தேறியுள்ளன. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 18 | 04.11.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.ப.03.44 வரை |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | மு.ப.08.56 வரை |
| சுபநேரம் : | 10.34 -12.04 |
| ராகுகாலம் : | 03.04-04.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான

# மூன்றாவது டெஸ்ட் சமநிலையில் முடிந்தது!



டெண்டுல்கரின் கண்ணில் தூசி பட்டபோது அதை அகற்ற உதவுகிறார் பொன்டிங்

இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதிய மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

டில்லியில் கடந்த 5 நாள்களாக நடைபெற்ற இந்தப் போட்டி நேற்று முடிவுக்கு வந்தது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 613 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கம்பீர் மற்றும் வி. வி. எஸ். லக்ஷ்மண் ஆகியோர் அபாரமாகத் துடுப்பாடி இரட்டைச்சதங்களைக் குவித்தனர். கம்பீர் 26 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 206 ஓட்டங்களை குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். லக்ஷ்மண் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்திய அணியின் அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கர் தமது பங்கிற்கு 68 ஓட்டங்களை எடுத்தார். இந்தியாவின் ஏனைய வீரர்களும் குறிப்பிடத்தக்களவு ஓட்டங்களை எடுத்து தமது அணியை வலுவான நிலைக்கு உயர்த்தினர்.

7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 613 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்தியா தனது முதலாவது இனிங்ஸ்ஸை நிறுத்திக் கொண்டது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும் வட்சன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். அந்த அணியின் வேகப்பந்து நட்சத்திரம் பிரட்லீ ஒரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தினார். பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை வேகமாகவேத் துரத்தியது. அந்த அணி வீரர் மைக்கல் கிளார்க் மாத்திரமே சதத்தை கடந்து 112 ஓட்டங்களைக் குவித்தார். இருப்பினும் ஆஸியின் ஏனைய வீரர்களான ஹைடன் (83), கட்டிச் (64), பொண்டிங் (87), ஹஸி (53) ஆகியோர் அதிரடியாக அரைச்சதம் கடந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். மொத்தமாக அந்த அணி 577 ஓட்டங்களை குவித்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.



இரு அணிகளினதும் முதல் இன்னிங்ஸ் முடிவடைந்த போதே போட்டியின் நான்காம் நாள் ஏறக்குறைய முடிவுக்கு வந்து விட்டது. எனவே போட்டி சமநிலையில் தான் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவின் இன்னிங்ஸில் இந்தியா சார்பாக துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக் 5 விக்கெட்டுகளை சாய்த்தமை சிறப்பம்சமாகும். அணித்தலைவர் கும்ளேயும் ஓரளவுக்கு சிறப்பாக செயற்பட்டு 3 விக்கெட்டுகளை சாய்த்தார். மிஸ்ராவுக்கும் 2 விக்கெட்டுகள் கிடைத்தன. தொடர்ந்து 2 ஆவது இனிங்ஸை தொடங்கிய இந்திய அணி 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 208 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி. அணி 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்ட நாயகனாக கம்பீர் தெரிவானார்.

## விடைபெறுகிறார் கும்ளே!

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் அனில் கும்ளே ஓய்வு பெறுகிறார்.

டில்லியில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்டின் கடைசி நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் ஓய்வு முடிவை அவர் அறிவித்தார்.

ஏற்கனவே கும்ளே ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று விட்டார். இந்நிலையில் டெஸ்ட் போட்டியில் இருந்து இந்த டெஸ்ட்டோடு அவர் விடைபெறுகிறார். அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியப் பந்து வீச்சாளராக கும்ளே விளங்குகிறார்.

டில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 3 ஆம் நாள் ஆட்டத்தின் போது இந்திய அணித் தலைவர் அனில் கும்ளே இடது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டதையடுத்து மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டார்.

ஆட்டத்தின் 53 ஆவது ஓவரில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா வீசிய பந்தை மாத்யூ ஹைடன் விளாசினார். அப்போது மிட் விக்கெட் திசையில் இருந்த கும்ளே பந்தைத் தாவிப் பிடிக்க முற்பட்டு கீழே விழுந்து சுண்டு விரலில் காயமடைந்து நிலைகுலைந்தார்.

அரை அங்குல நீளத்துக்கு விரல் கிழிந்தது.



இதையடுத்து உடனடியாக மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றனர். விரலில் தையல் போடப்பட்டது. இதனால் அவர் தொடர்ந்து விளையாட முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

எனினும் அவர் சனிக்கிழமை விளையாடினார்.

கோட்லா ஆடுகளம் கும்ளேயின் 'சொர்க்க பூமி' என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு 6 டெஸ்ட்களில் 55 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளனர். கடைசியாக விளையாடிய 2 டெஸ்ட்களிலும் ஆட்ட நாயகன் விருதுகளை அவர் பெற்றார். 1999 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடிய அவர் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். (ஒ)

## கென்யாவுடனான ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள கென்ய கிரிக்கெட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 336 ஓட்டங்கள் எடுத்தது. டுமினி (90), கலிஸ் (71), பௌச்சர் (57), கிப்ஸ் (44) ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 49.1 ஓவர்களில் 177 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமாகத் தோல்வி அடைந்தது. துல்லியமாக பந்து வீசிய தென்னாபிரிக்காவின் போத்தா 4, டுமினி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். (ஒ)

## தடையை நீக்க கம்பீர் மனு; விசாரிக்க ஐ.சி.சி. ஏற்பாடு

ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து இந்திய வீரர் கம்பீர் செய்துள்ள மேன்முறையீடு குறித்து விசாரிப்பதற்கு தென்னாபிரிக்க நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா - ஆஸ்திரேலியா இடையே டில்லியில் நடந்துவரும் மூன்றாவது டெஸ்டின் முதல் நாளில் தான் இந்திய வீரர் கம்பீருக்கும் ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வட்சனுக்குமிடையே திடீரென மோதல் ஏற்பட்டது.ஓட்டம் எடுக்க முயன்ற கம்பீருக்கு இடையூறு செய்யும் வகையில் நின்றுகொண்டிருந்த வட்சன் மீது,கம்பீர் தனது முழங்கையால் இடித்தபடி ஓடினார்.

இதனையடுத்து,சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸின் (ஐ.சி.சி.) நடத்தை விதியை மீறினர் என இரண்டுபேர் மீதும் குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டு, விசாரணை நடத்திய போட்டி நடுவர் கிறிஸ்ட் பிராட், வட்சனுக்கு போட்டிக்கட்டணத்தில் இருந்து 10 சதவீத தொகையை அபராதமாகவும், கம்பீருக்கு ஒரு டெஸ்டில் விளையாடத் தடையும் விதித்தார்.

கம்பீர் வேண்டுமென்றே உடல் ரீதியான தாக்குதலில் ஈடுபட்டதால் அவர்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதென பிராட் விளக்கமளித்தார்.

எனினும்,கம்பீருக்கு விதிக்கப்பட்ட இந்தத் தண்டனையை(தடையை) எதிர்த்து இந்திய கிரிக்கெட் சபை உடனடியாக ஐ.சி.சி யிடம் மேன்முறையீடு செய்தது.

இந்த நிலையில், கம்பீரின் மேன்முறையீடு குறித்து விசாரிக்க தென்னாபிரிக்க அரசமைப்பு சட்ட நீதிமன்ற மூத்த நீதிபதி



அல்பி சாக்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார் என ஐ.சி.சி. நேற்று வெளியிட்டசெய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அவர், ஏழு நாட்களுக்குள் விசாரணை சம்பந்தமாக உத்தரவு பிறப்பிப்பார். முன்னைய தண்டனையை உறுதி செய்யவோ அல்லது தீர்ப்பில் மாற்றம் செய்யவோ அவருக்கு அதிகாரம் உண்டு.

ஆனால், மேன்முறையீ மீதான இறுதித் தீர்ப்பு வரும்வரை கம்பீர் தொடர்ந்தும் போட்டிகளில் பங்கேற்பதில் எந்தச் சிக்கலும் கிடையாது. வருகிற ஆறாம்திகதி நாக்பூரில் தொடங்கும் கடைசி டெஸ்டில் கம்பீர் ஆட வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கங்குலி, சச்சின், லக்ஷ்மணுக்கு பாராட்டு விழா நடத்த ஏற்பாடு



நாகபுரி, நவ. 03

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போகும் சௌரவ் கங்குலிக்குப் பாராட்டு விழா நடத்துகிறது இந்திய கிரிக்கெட் சபை.

நாகபுரியில் நடைபெற உள்ள 4 ஆவது கிரிக்கெட் டெஸ்டின் தொடக்க நாளில் அந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்போது சச்சின் டெண்டுல்கர், வி.வி. எஸ்.லக்ஷ்மண் ஆகியோரும் பாராட்டப்படவுள்ளனர். இந்திய அணியின் முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாகபுரியில் நடைபெறவுள்ள 4 ஆவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்த ஓய்வு பெறுகிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் வீரர் பிரைன் லாராவின் அதிக ஓட்டக்குவிப்பு சாதனையை முறியடித்தமைக்காக சச்சின் டெண்டுல்காரும், 100 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக லக்ஷ்மணும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாகபுரியில் போட்டியில் பங்கேற்பதன் மூலம் தனது 100 ஆவது போட்டியை நிறைவு செய்கிறார் லக்ஷ்மண்.

ஜம்தாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் 4 ஆவது டெஸ்ட் நடைபெறவுள்ளது. அங்குள்ள கிளப் ஹவுஸில் பாராட்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு 7.30 மணிக்குத் தொடங்கும் நிகழ்ச்சியில் முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார், தலைவர் சசாங் மனோகர் மற்றும் கிரிக்கெட் சங்க உயரதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

## உலக பட்மின்ரன் தொடரின் இறுதிப்போட்டியில் சாய்னா!

உலக ஜூனியர் சம்பியன் பட்மின்ரன் தொடர் புனேயில் நடக்கிறது. நேற்றுமுன்தினம் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சாய்னா நேவல், சீனாவின் சிக்சியன் வாங்கைச் சந்தித்தார்.

விறுவிறுப்பான அரையிறுதியில் முதல் செட்டை சாய்னா 22 - 20 எனக் கைப்பற்றினார். தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா இரண்டாவது செட்டை 21 - 12 என தன் வசப்படுத்தினார். இறுதியில் செய்னா 22 - 20, 21 - 12 என்ற் நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவில் சேனையூர், கட்டைபறிச்சான் பகுதிகள்!

திருகோணமலை மாவட்டத்தில் தனித் தமிழ் பிரதேசமான மூதூர் கிழக்கின் மீது 2006 ஆம் ஆண்டு மஹிந்த அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அப்பிரதேசத்தைச் சிதைத்து இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவந்தது. அங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் இராணுவ நடவடிக்கையின்



போது தமது உறவுகளை இழந்து, உடைமைகளை இழந்து, சிலர் அங்கவீனரான நிலையில் இன்றுவரை கிழக்கில் உள்ள நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் அகதிவாழ்க்கை வாழ்கின்றனர்.

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்மக்களை அங்கு மீளக்குடியமர்த்துவதில்லை என்ற நிலையில் மஹிந்த அரசாங்கம் அப்பிரதேசத்தை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக்கியது. அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை வேறு இடங்களில் நிரந்தரமாக குடியேற்றுவதற்கு அரசாங்கம் பலமுறை முயற்சித்தது. ஆனால், மூதூர் கிழக்கு மக்கள் அதற்கு இணங்கவில்லை. தமது பிரதேசத்தின் நீண்டகால வரலாறு, கலாசாரம், பண்பாடு என பலவற்றை வலியுறுத்தி தம்மை மீண்டும் தமது பிரதேசத்திலேயே குடியமர்த்த வேண்டும் எனப் பலமுறை அரசாங்கத்துக்கும் உலக நாடுகளுக்கும் வலியுறுத்திவந்தனர். மக்களின் அழுத்தம் காரணமாக தற்போது மூதூர் கிழக்கில் சில பகுதிகளில் மட்டும் மீள் குடியமர்வு இடம்பெற்று வருகின்றது. அதில் சேனையூர், கட்டைபறிச்சான் பகுதிகளும் தெரிவுசெய்யப்பட்டு மீள்குடியமர்வு இடம்பெறுகின்றது. இந்த நிலையில் அப்பகுதிகளைப் பற்றிப் பார்ப்போம்.

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க நாகம்மாள் ஆலயம் அமையப்பெற்ற சேனையூர் பகுதி இராணுவ ஆக்கிரமிப்பால் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டிருக்கின்றது. சேனையூர், கட்டை பறிச்சான் பகுதிகளில் உள்ள மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, இடிக்கப்பட்டிருக்கின்றன. ஒருசில வீடுகளை மட்டுமே அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படி எஞ்சியிருக்கும் வீடுகளில் கூட கதவுகள், யன்னல்கள் இல்லை. அங்குஉள்ள இந்து ஆலயங்களைப் பற்றிப் பார்க்கின்றபோது சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயம், கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயம், மருதநகர் புவனகணபதி ஆலயம், சேனையூர் வர்ணகுல விநாயகர் ஆலயம், சேனையூர் வராஹி அம்மன் ஆலயம்

## மூதூர் கிழக்கான்

என்பன முக்கியமான ஆலயங்கள் ஆகும். இந்த ஆலயங்களில் இருந்த ஐம்பொன்னால் செய்யப்பட்ட எழுந்தருளி விக்கிரகங்கள், வெண்கலத்தால் செய்யப்பட்ட ஆலயப் பொருள்கள் ஒன்றுகூட அங்கு இல்லை. அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தில் இருந்த விலைமதிக்கமுடியாத அம்மன் சிலை அங்கு இல்லை. வெண்கலத்தால் செய்யப்பட்ட சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கிருஷ்ணசிலை மற்றும் பழைய விளக்குகள், தங்க ஆபரணங்கள், பெரிய காண்டா மணி உட்பட பல கோடிகோடி பெறுமதியான ஆலயப் பொருள்கள் அந்த ஆலயத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. மற்றும் சேனையூர் வர்ணகுல விநாயகர் ஆலயம் பல நூறு வருடங்களுக்கு முற்பட்டது என அங்குள் ளவர்கள் கூறுகின்றனர். இந்த ஆலயம் கூட உடைக்கப்பட்டு ஐம்பொன்னால் செய் யப்பட்ட எழுந்தருளி விக்கிரகங்கள், பெறுமதியான ஆலய உபகரணங்கள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. தமிழர்களின் கலாசார பொக்கிஷங்களை அடியோடு அழிக்கும் செயற்பாடுகள்

# கோயில்கள் சேதம் விக்கிரகங்கள் மாயம்

அங்கு இடம்பெற்றிருக்கின்றன. கல்விகலாசாலைகள்



கூட அழிக்கப்பட்டிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாக விளங்கிய சேனையூர் மத்திய கல்லூரி, கட்டைபறிச்சான் விபுலானந்தா வித்தியாலயம் என்பன உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டும் சிதைக்கப்பட்டும் இருக்கின்றன. இனி அப்பிரதேசத்தில் தமிழர்கள் வாழக்கூடாது என்ற முடிவோடு தான் தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்கள் அங்கு அழிக்கப்பட் டிருக்கின்றன.

பொதுநூலகம் கூட அங்கு தப்பவில்லை. பெறுமதியான பழைய புத்தகங்கள், ஓலைச் சுவடிகள் கூட இல்லை. நினைவாலயங்கள் கூட இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இன்று சேனையூர், கட்டைபறிச்சானைப் பார்க்கும்போது கல்நெஞ்சம் உள்ளவர்களுக்கும் கண்ணீர் வரும். அங்குள்ள மக்கள் உடைந்த வீடுகளை துப்புரவு செய்து மீண்டும் தமது மண்ணில் வாழ முயற்சிக்கின்றனர்.

இதேவேளை பயன் தரும் மரங்களான பலா, தென்னை, கமு , வாழை, மா என்பன அங்கு அடியோடு அழி... பட்டிருக்கின்றன. அப்பிரதேசத்தைப் பார்க்கும்போது பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட இடம் போன்று காணப்படுகின்றது. அரசாங்கம் அப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறைகாட்டாது என்பது அங்குள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும். எனவே, அம்மக்களின் வாழ்க்கையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள்தான் முன்வரவேண்டும் என அப்பகுதி புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர். இதேவேளை, சம்பூர் உட்பட இன்னும் பல பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயமாக இருப்பதனால் அப்பகுதி மக்கள் கிழக் கில் உள்ள நலன்புரி நிலையங்களில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

---

# வாசகர் திருமுகம்

## வாடும் நெற்பயிர்களைக் காப்பாற்ற விவசாயிகளுக்கு உதவ முன்வருவார்களா?

யாழ்.குடாநாட்டில் பருவ மழையை நம்பி நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தற்போது பெரும் இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

பெய்யத் தொடங்கிய பருவமழை தொடராமல் விட்டமையே இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம்.

இம்முறை காலபோக நெற்செய்கையில் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் ஈடுபடத் தொடங்கினர். கடந்த மாதத் தொடக்கத்தில் ஆரம்பித்த பருவ மழையை நம்பியே பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டனர். விவசாயிகளின் நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வகையில் கடந்த மாத முற்பகுதியில் அடைமழை தொடர்ந்து பெய்தது. இதனையடுத்து விவசாயிகள் தமது வயல்களில் நெல்விதைப்பை மேற்கொண்டார்கள். நெற்பயிர்கள் வயல்களில் பச்சைப் பசேலென முளைத்துத் துளிர்விட்டன.

எனினும் இரண்டொரு தினங்கள் மட்டும் பெய்த பருவமழை விவசாயிகளின் நம்பிக்கையைப் பொசுக்கிவிட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக இங்கு ஒரு சொட்டு மழைகூடப் பெய்யவில்லை. இதனால் பல வயல்களில் மண் காய்ந்து நெற்பயிர்கள் காய்ந்து சாகும் நிலையை எட்டிவிட்டன.

எனினும் கிணறு மற்றும் கேணிகள் உள்ள வயல்களிலாவது நெற்பயிர்களைக் காப்பற்ற நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்சவேண்டிய அவசிய,அவசர தேவை எழுந்துள்ளது.

மழையின்றி முழுப்பயிர்களும் அழிவதை விட நீர்பாய்ச்சியாவது அந்தப் பயிர்களில் இருந்து பெறக்கூடிய பலனைப் பெற்று செலவு செய்த பணத்தையாவது எடுத்துவிடவேண்டும் என்ற முனைப்பில் விவசாயிகள் பலர் துடிக்கிறார்கள்.

நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரைப் பாய்ச்சுவதாயின் அவர்கள் பெருமளவு எரிபொருளுக்கு செலவு செய்யவேண்டியுள்ளது. ஏற்கனவே நொந்துபோயுள்ள விவசாயிகளுக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்யப் போதியளவு பண வசதியும் இல்லாமையால் அவர்கள் பெரும் திண்டாட்டத்தில் உள்ளார்கள்.

எனவே விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், உப உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் அமைப்புக்கள் இந்த விடயத்தில் உடன் அக்கறையும் கவனமும் செலுத்தி காலபோக செய்கையைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

எனவே விவசாயிகளுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், விவசாயிகள் சங்கங்கள், சம்மேளனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடியாகச் செயற்பட்டு காலபோக நெற்செய்கையையும், விவசாயிகளையும் காப்பாற்றுமா? காத்திருக்கிறார்கள் அவர்கள்.

கெருடாவில்.

---

# புலிகளின் விமானத் தாக்குதலின் எதிரொலி; நேற்றுத் தொடக்கம் நாடு முழுவதும் மின் வெட்டு

கொழும்பு,நவ.3

நாடுமுழுவதிலும் மின்சார துண்டிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மின்சாரசபை தீர்மானித்துள்ளது. இது நேற்று முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. களனி திஸ்ஸ மின்சார நிலையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மின்சார உற்பத்தி குறைவடைந்தமையால் இவ்வாறான மின்சாரத் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே, புலிகளின் வான் தாக்குதல் இடம்பெறுவதற்கு,பல நாள்களுக்கு முன்பே களனிதிஸ்ஸ வளாகத்திற்குள் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுவந்த அமெரிக்க நிறுவனமான ஒ.ஈ.எஸ்.நிறுவனம் மின் உற்பத்தியை நிறுத்தியிருந்தது. இலங்கை அரசாங்கம் அந்நிறுவனத்திற்கான கொடுப்பனவுகளை செலுத்தாமல் விட்டமையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

விமானத் தாக்குதல் காரண... 115 மெகாவற் மின்சாரம் உற்பத்தி செய்து வந்த ஜி.ரி.ரேர்பைன் அமைப்பும் [?]35 மெகாவற் மின்சாரத்தை உற்பத்தி செய்து வந்த இன்னொரு அமைப்பும் செயல் இழக்கச் செய்யப்பட்டு விட்டன.

இந்த நிலமையால் கொழும்பு மாநகரத்தைத் தவிர ஏனைய பெரிய நகரங்களுக்கான மின்விநியோகத்தை குறிப்பிட்ட நேரங்களில்,மின்சாரசபை துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாம். (ப)



நீண்ட நாள்களாகப் பழுதடைந்த நிலையில் இருந்த யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் பாரவூர்தி ஒன்று பொதுமக்களின் அத்தியாவசிய சேவை கருதி பல லட்சம் ரூபா செலவில் மீண்டும் புனரமைத்து கடந்த சனிக்கிழமை வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டது.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் நிகழ்வில் பாரவூர்தி திறப்பை சங்கத்தின் சாரதி வே.முருகையாவிடம் வழங்குவதையும் அருகில் சங்க பொதுமுகாமையாளர் து.மனோகரன், சங்க இயக்குநர் ச.டொமினிக் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவு கிடைத்தால் தரமான ஆடைகளை உள்ளூரிலேயே வடிவமைக்கலாம்

*''நான் கற்றுக்கொண்ட தையல் பயிற்சியின் மூலம் சுயமாகத் தொழில் செய்து மனநிறைவையும், வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது'' என்கிறார் சுயதொழில் முயற்சியாளரான யேசுதாசன் பவிதா. பண்டத்தரிப்புப் பகுதியில் சமுர்த்தி வங்கியின் கடன் உதவியுடன் தையல் இயந்திரம் ஒன்றைப் பெற்று சிறிய அளவில் தையல் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார் பவிதா. சுயதொழில் முயற்சி குறித்து பவிதாவும், அவரது ஆசிரியர் திருமதி வே.நந்தகுமாரும் தமது கருத்துக்களை உதயனுடன் பகிர்ந்து கொண்டனர். பவிதா கூறியவை:*



பவிதாவின் தையலகம்

**கேள்வி:** உங்களது சுயதொழில் முயற்சிக்கான தையல் பயிற்சிகளை எங்கு பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:** ஆரம்பத்தில் எனது அன்ரியிடம் பழகிய போதும் தையல் தொழிற்பயிற்சியை முழுமையாகப் பெற்றுக் கொண்டது வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி நெறிகளின் மூலம்தான்.

**கேள்வி:** பயிற்சிகளை முடித்துக் கொண்ட பின் வேறொரு கடையில் வேலை செய்யாமல், சுயமாகவே தொழில் பயிற்சி நிலையம் தொடங்கும் எண்ணம் எப்படி ஏற்பட்டது?

**பதில்:** நவீன மோஸ்தரில் ஆடைகளை வடிவமைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருந்தது. அத்தோடு கடன் உதவி பெற்று தையல் இயந்திரத்தை வாங்கக் கூடிய நிலையும் இருந்தது. எனவே நானே சொந்தமாக ஒரு சிறிய தையல் கடையை ஆரம்பித்தாலென்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. எனது சகோதரியும் தைக்கக் கூடியவர் என்பதால் தேவையைப் பொறுத்து அவரது உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும். எனது குடும்பத்தினரும் என்னுடைய விருப்பத்திற்கு ஒத்துழைப்புத் தந்தார்கள். அதனால் சிறிய அளவில் எனது கடையை ஆரம்பித்தேன். சுயமாக ஒரு தொழிலைச் செய்வது மனதுக்கு நிறைவானது தானே?

**கேள்வி:** நீங்கள் மனநிறைவு பெற்றிருக்கிறீர்கள். மகிழ்ச்சிக்குரியது. தற்போது தையல் நிலையத்தின் மூலம் உங்களது வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளதா?

**பதில்:** வங்கிக் கடனை அடைத்துவிட்டேன். மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூபா 6000 வரையில் கிடைக்கிறது. இப்போதைய சூழலில் இது பெரிய வருமானம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. எனினும் எங்களது குடும்பச் செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதே ஓரளவு மேம்பாடு தானே?

**கேள்வி:** இத் தொழிலில் நீங்கள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் குறித்து...?

**பதில்:** சிக்கல்கள் என்று பெரிய அளவில் எதுவும் இல்லை. தையல் கடைகள் என்று எமது பகுதியில் குறிப்பிடக் கூடிய அளவில் இல்லை. பயிற்சிபெற்ற சிலர் தமது வீடுகளில் சிறு கைத்தொழிலாக இதனைச் செய்து வருகிறார்கள். அதனால் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தக் கூடியதாக ஆடைகள் வடிவமைப்பில் மேலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான சில கருவிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. தையல் கூலியும் குறைவாகவே வகுக்க வேண்டியுள்ளது. பூவேலைகள் போன்றவற்றைச் செய்வதற்கான சில உபகரணங்களையும் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது.

**கேள்வி:** எவ் வகையான ஆடைகளை நீங்கள் வடிவமைக்கின்றீர்கள்?

**பதில்:** பெண்களுக்கான ஆடைகளே கூடுதலாகத் தைக்கப்படுகிறன. எப்போதாவது பாடசாலைச் சீருடைகளைத் தைக்கக் கூடிய வாய்ப்பும் கிடைக்கிறது. ஒரு சட்டையைத் தைக்க வேண்டும் என்பதற்காக 500 ரூபா கொடுத்துத் துணியை வாங்குபவர்கள், 80 ரூபா தையற் கூலியைக் கொடுத்துத் தமது சட்டையைத் திரும்பப் பெறுவ தில் தயக்கம் காட்டுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது

'அவசரம் தேவை' எனக்கூறித் துணிகளைத் தைப்பதற்குத் தருபவர்களில் சிலர் தைத்து முடித்ததும் தமக்குரிய உடைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதில் அவசரப்படுவதில்லை. சுயதொழில் முயற்சியாளர்களைப் பொறுத்தவரை இது பின்னடைவு தான்.

**கேள்வி:** தையல் தவிர்நத வேறு தொழில் முயற்சிகளும் ஈடுபட்டு வருகிறீர்களா?

**பதில்:** ஆம்! தையலுடன், பிறந்தநாள், திருமணத்திற்கான கேக் வகைகள், மணப் பெண்ணிற்கான உடைகள், கொண்டைக்குப் பயன் படுத்தும் சடைநா கம், வீட்டு அலங்காரப் பொருள்கள் போன்ற பொருள்களையும் செய்கின்றேன். தற்போதைய விலைவாசியில் இவை ஓரளவு கை கொடுக்கின்றது.

*சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த பகுதியினருக்கு பயிற்சிகளை வழங்கும் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க பயிற்சி நிலைய ஆசிரியை திருமதி வே.நந் தகுமார் இந்தப் பயிற்சி நெறிகள் குறித்துத் தெரிவித்த கருத்துக்கள்.*

**கேள்வி:** பயிற்சியாளர்களுக்கு எவ் வகையான உதவிகளைத் திணைக்களம் வழங்குகிறது? எந்த அடிப்படையில் தெரிவுகள்இடம்பெறுகிறது?

**பதில்:-** பொதுவாக பயிற்சி பெற விரும்பும் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. எனினும் கூடுதலான அளவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ்உள்ள பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. பயிற்சிக்கென 45 பேர்வரை தெரிவு செய்யப்பட்டாலும் மிகவும் கஷ்டப்பட்ட பிள்ளைகள் 25 பேர்களுக்கு தினசரி ரூபா 50 உதவி நிதியாக வழங்கப்படுகிறது.

## பயிற்சி நெறிகளில் அக்கறையுடன் பங்கு பற்றினால் ஆதார வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்

**கேள்வி:** சுயதொழில் ஊக்குவிப்புக்கான பயிற்சி நெறிகளில் எவ்வகையான பயிற்சிகளை வழங்கி வருகிறீர்கள்?

**பதில்:** இந்தப் பயிற்சி நெறிகளின் நோக்கமே ஒவ்வொரு பிள்ளைகளும் முடிந்த அளவு சுயமுயற்சியின் மூலம் தமது வாழ்க்கைக்கு ஆதாரமான வருமானத்தை ஓரளவாவது பெற்றுக்கொள்ள உதவுவதே. தையல் மட்டுமன்றி பன்னவேலைகள், வீட்டுக்கான அலங்காரப் பொருள்கள் தயாரிக்கும் முறைமைகள், கேக் வகைகள் தயாரித்தல், உணவுப் பொருள்களைத் தயாரித்தல், பூ வேலைகள் எனப் பலதரப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**கேள்வி:** நீங்கள் பலருக்குப் பயிற்சிகளை வழங்கியிருப்பீர்கள். அநேகமாக பயிற்சி பெற்றதோடு சரி என்று இருப்பவர்களை அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. உங்களிடம் பயிற்சி பெற்றவர்கள் சுயதொழில் முயற்சியில் எந்த அளவில் ஆர்வம் காட்டுகிறார்கள்?

**பதில்:** ஏனைய பகுதிகளில் எப்படியோ தெரியாது. ஆனால் இங்கு பயிற்சி பெற்றவர்கள் ஏதோ ஒருவகையில் தாங்கள் பெற்ற பயிற்சிகளின் மூலம் ஓரளவாவது வருமானம் பெறுபவர்களாகவே இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் தமது வீடுகளில் இருந்தபடியே தையல் மற்றும் கேக் வகைகளைத் தயாரித்துக் கொடுக்கும் வேலைகளை பல பெண்கள் செய்துவருகின்றார்கள்.

**கேள்வி:** சுயதொழில் முயற்சியாளர்களுக்கு இங்குள்ள ஒத்துழைப்புக்கள் குறித்து கருத்துக் கூறமுடியுமா?

**பதில்:** நொறுக்குத் தீனி போன்றவற்றைத் தயாரிப்பவர்களுக்கு வியாபாரிகள் ஓரளவு ஆதரவை வழங்கி வருகிறார்கள். தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்த அளவுக்கு புடைவை விற்பனையாளர்களின் ஆதரவு இல்லை என்றே நினைக்கிறேன்.

**கேள்வி:** தையல் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வியாபாரிகள் எந்த வகையில் உதவவேண்டும் என்று நினைக் கிறீர்கள்?

**பதில்:** அநேகமாக புடவைக் கடைக்காரர்கள் தமது கடைகளுக்கென தென்பகுதியில் இருந்து விற்பனைக்காக உடுப்புக்களை எடுத்து வருகிறார்கள். இங்கே தரமான நவீன மோஸ்தர்களில் ஆடைகளைத் தயாரிக்கக் கூடிய திறனமையாளர்கள் இருந்தபோதும் பொருளாதார வசதிகள் இன்மையால் துணிக்களைக் கொள்வனவு செய்து ஆடைகளைத் தயாரித்து வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கக் கூடிய வாய்ப்புக்களின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு கடன் அடிப்படையில் துணிகளைக் கொடுத்து அவர்களிடமிருந்து ஆடைகளைக் கொள்வனவு செய்யும் நிலைக்கு புடைவைக் கடை உரிமையாளர்கள் முன்வர வேண்டும். ஆடைகளை விற்பவர்களும் சரி, வாங்கும் மக்களும் சரி ''அக்கரை மட்டும் பச்சை'' என்று இருக்கக் கூடாது. இக்கரையிலும் பச்சை உண்டு என்பதைபுரிந்து கொள்ள வேண்டும்.



யோ.பவிதா

நேர்காணலும் படங்களும்: நம்பி

**கமுகங் கன்றுகள் விற்பனைக்கு**

ஒரு வருடம் பூர்த்தியடைந்த நல்லினக் கமுகங் கன்றுகள் பொதி செய்யப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: **K.R.**
270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு
(79469)

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

1033 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 24 32 41 46

31-10-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500167633 - 500187916

ஜக்பொட் பரிசு ரூபா. 3,834,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 [illegible] | 218,539 | 20/- | 4,370,780/- |
| 2 [illegible] | 20,087 | 40/- | 803,480/- |
| 1 [illegible] + [illegible] | 19,928 | 60/- | 1,195,680/- |
| 2 [illegible] + [illegible] | 1,813 | 200/- | 362,600/- |
| 3 [illegible] | 532 | 1000/- | 532,000/- |
| 3 [illegible] + [illegible] | 57 | 10,000/- | 570,000/- |
| 4 [illegible] | 3 | 200,000/- | 600,000/- |
| 4 [illegible] + [illegible] | - | 3,834,200/- | - |
| மொத்தம் | | | 8,434,540/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| செலுத்தப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 260,964 | | 8,934,540/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,810,550/-

| | |
|---|---|
| குருநாகல் | 500176755-7-25 |
| கம்பஹா | 500169910-4-34 |
| [illegible] | 500179384-8-27 |
| [illegible] | 500182274-1-12 |
| மாத்தறை | 500169560-4-03 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

**ஓராண்டு நினைவஞ்சலி**





| திருமதி கோபாலசிங்கம் தனலட்சுமி [கொழும்புத்துறை] | | அமரர் மாரிமுத்து பரமேஸ்வரி [சுழிபுரம்] |
|---|---|---|
| 27.08.1946 | மண்ணில் | 19.02.1946 |
| 14.11.2007 | விண்ணில் | 13.12.2007 |
| பஞ்சமி [03.11.2008] | திதி | சதுர்த்தி [01.12.2008] |

இரு வீட்டின் தலைவியராய் இருந்து நீங்கள்
ஒரு வீட்டின் ஒளி விளக்காய் மாறிப் பின்னர்
திருவீட்டில் உறைவதற்கோ திங்கள் ஒன்றில்
உருவிட்டு அருவானீர் ஓராண்டில் சொல்வீர்.

எமது குடும்பத் தலைவியரின் ஆத்மாக்கள் சாந்திகொள்ளப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தவர்கள் கொழும்புத்துறை.

குடும்பத்தவர்கள் சுழிபுரம்.

(76617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட வகுப்புகளுக்கு மூன்றாம் தவணைப் பரீட்சை தேசிய ரீதியில் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது

அச்சுவேலி, நவ.3

தேசிய ரீதியில் தரம் 6, தரம் 7, தரம் 10, தரம் 11 வகுப்புகளுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை இம்மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

நாடளாவிய ரீதியில் பொதுப்பரீட்சையாக நான்கு வகுப்புகளுக்குமான பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

புதிய கல்வித் திட்டத்தின் பிரகாரம் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சைகள் எதிர் காலத்தில் பொதுப்பரீட்சையாகவே நடைபெறவுள்ளன.

தரம்6, தரம்7, தரம்10, தரம் 11 வகுப்புகளுக்கான பரீட்சை வினாப்பத்திரங்கள், கல்வி அமைச்சின் வழிப்படுத்தலின் பிரகாரம், தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

பரீட்சைகள் இம்மாதம் 18ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 4ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நேர அட்டவணை மற்றும் வினாப்பத்திரங்கள் போன்ற ஆவணங்கள் மாகாணக்கல்வி அமைச்சின் ஊடாக வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள், வலய மற்றும் கோட்டமட்டத்தில், மத்திய நிலையங்களில் வைத்து குழுநிலையில் மதிப்பீடு செய்யப்பட்டு, பரீட்சைப் புள்ளிகள் தேசிய மட்டத்தில் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.

பாடசாலைகளில் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதேவேளையில், தவணைப் பரீட்சைகள் ''கணிப்பீட்டு தொகுப்பு'' செயற்பாடாக இல்லாமல் பழைய நடைமுறையில் நடைபெறுவது அவதானிக்கப்பட்டதை அடுத்து, கணிப்பீட்டுத் தொகுப்பு மதிப்பீடாகவே தவணைப் பரீட்சைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''புதிய பாடத்திட்டத்திற்கமைவாக எதிர் காலத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் தவணைப் பரீட்சைகள் மூன்றும் தேசிய மட்டத்தில் பொதுப் பரீட்சையாகவே நடை பெறவுள்ளன'' எனத் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில்

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான வீட்டுத்திட்டத்தில் எண்பது வீதமானவை பூர்த்தி

வடமராட்சி, நவ.3

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்மைப்புத் திட்டத்தில் 80 சத வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பிரதேச செயலக வட்டாரம் இத்தகவலைத் தெரிவித்தது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஐந்தாயிரத்து 535 வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றுள் 80 வீதமான வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

ஏனைய வீட்டுத்திட்டங்களுக்கான பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகுவிரைவில் அவை பூர்த்தியடைந்துவிடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(202-236)

## உரிமையை மதிக்கும் கருத்தியல் தெளிவும் நடைமுறையுமே அமைதிக்குச் சிறந்த வழி

### யாழ்.பல்கலை துணைவேந்தர் கருத்து

நல்லூர், நவ.3

சமூகங்களின் கூட்டு உரிமையை மதிக்கும் கருத்தியல் தெளிவும் நடைமுறையுமே அமைதிக்குச் சிறந்த வழிகள்.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசியர் என்.சண்முகலிங்கன்.

கலாநிதி இரகுநாதனின் 'உலகத் தேர்தல் முறைமைகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் ஒன்றியத் தலைவர் சி.நிமலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய துணைவேந்தர் மேலும் கூறியவை வருமாறு:

சாதாரண மக்களில் இருந்து அரசியல்வாதிகள் வரை அரசறிவியலில் அறிவுத் தெளிவுபெற வேண்டும். அத்துடன் அதன் வழியில் செயற்படவும் வேண்டும். இவற்றிலேயே ஒவ்வொரு தேசத்தினதும் எதிர் காலம் தங்கியுள்ளது.

அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டு உரிமைகளுடன் மக்களை வாழ வைக்கும் ஏற்பாடே நிலையான அமைதிக்கு வழியாகும். அவர்களது உடன்பாட்டின் படியான அரசியல் அதிகாரம் அவர்களது பங்கேற்புடனான சமூகமேம்பாடு என்பவற்றை உறுதிசெய்யும் அரசியலமைப்பு மாற்றங்கள் வேண்டும்.

உலக தேர்தல் முறைமைகள் பற்றிய புதிய நூல் உலக நாடுகளின் அரசியலமைப்புகள் பற்றிய அறிவு வெளிச்சத்தைத் தருகின்றது. உலக அனுபவங்களில் இருந்து எங்களுக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள இது போன்ற அறிவுத் திரள்கள் துணை புரிகின்றன.



தமிழை அறிவியல் மொழியாக்கும் காலத்தேவையிலும் இவ்வாறான முயற்சிகள் பெரும் பங்காற்றுகின்றன. சமூகப் பயனான அறிவுக்கருவிகளை ஆசிரியர் மென்மேலும் வழங்க வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் வே.ஆ.மாணிக்கவாசகரும் ஆய்வுரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் நிகழ்த்தினர். (202-111)



அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு (சொண்ட்) நடத்திய காலநிலை மாற்ற ஆய்வரங்கில் அமைப்பின் பணிப்பாளர் ஆர்.செந்தூர்ராஜா, வாழ்நாள் பேராசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுகின்றமையை முதலிரு படங்களிலும் ,
ஆய்வரங்கில் கலந்து கொண்டவர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## தையல் பயிற்சி நிலையம்

வண்ணை, நவ.3

குருநகரில் ஆண்களுக்கான தையல் பயிற்சி நிலையமொன்றை யேசுசபை அகதிப் பணியின் யாழ். மாவட்டப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளாரின் வேண்டுகோளுக்கமைய குருநகர், பாங்ஷால் வீதியில் இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யேசு சபை அகதிப் பணிநிலைய இயக்குநர் அருட்திரு.பெனடிக்ற் யூஜீன் அடிகளார் நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (202-160)

## டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கணிய அளவியல் தேசிய டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானக் பிரிவுகளில் சித்திபெற்றவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் - மேலதிக விவரங்களை கல்லூரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் பணிப்பாளர் ந.ஜோகராஜன் தெரிவித்தார். (202-302)

## நிகழ்வுகள்

நல்லூர், நவ.3

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவனும் ஓய்வுபெற்ற பொறியியலாளருமான கலாநிதி ச.கனகசபை, வைத்திய கலாநிதி சிவபாதநாயகி கனகசபை ஆகியோரும் கலந்து கொள்வர். (202-111)

★ ★ ★

வடமராட்சி, நவ.3

குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதி, நெறியாழ்கை செய்த 'கூடி விளையாடு பாப்பா' என்னும் சிறுவர் நாடகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மேடையேற்றப்பட்டுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (202-236)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.3

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தில் 15 வருடங்களாக கந்தபுராண படனத்தை நடத்தி வரும் சிவஸ்ரீ மு.சோமசுந்தரக் குருக்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இந் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலயத்தில் பிரதம குரு தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கந்தஷஷ்டி சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.3

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கந்தஷஷ்டி சிறப்புச் சொற்பொழிவை கடந்த புதன்கிழமை தொடக்கம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்றது.

தினமும் பிற்பகல் 4 மணிக்கு இந்தச் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவில் இன்று செவ்வாய்க்கிழமை மதுரகவி எம்.பி.அளானந்தம் 'யாம் இருக்கப் பயம் ஏன்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (204)

## யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி 250 ரூபாவால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி இந்த மாதத்தில் இருந்து 250ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

தற்போது மாதாந்தம் 2ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்டு வரும் இவ்வாழ்க்கைச் செலவுப்படி இம் மாதத்தில் இருந்து இரண்டு ஆயிரத்து 250 ரூபாவாக வழங்கப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப ஊழியர்களுக்கு வழங்கப்படும் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மேலும் 250 ரூபாவால் அதிகரிப்பு செய்யப்பட்டு பணியாளர் களுக்கு வழங்கப்படும்.

எனவே சகல பணியாளர்களும் சங்கத்தின் எதிர்கால நலன் குறித்து அதிக சிரத்தையுடன் பணியாற்ற வேண்டும். சங்கக் கிளைகளில் வியாபார நடவடிக்கைகளையும் அதிகரிக்க வேண்டும் எனச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (202-224)

## பாடசாலை ஆய்வுகூடப் பணியாளர்களின் பதவி உயர்வுக்கு மாறுபட்ட நடைமுறைகள்

### வலயத்துக்கு வலயம் பின்பற்றப்படுவதாகச் சுட்டிக்காட்டு

அச்சுவேலி, நவ.3

பாடசாலை ஆய்வுகூடப் பணியாளர் தரம் III பதவியில் இருப்பவர்களை தரம் II இற்கு பதவியுயர்த்துவதில் கல்வி வலயத்திற்கு வலயம் மாறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்பநிலையில் ஆய்வுகூடப் பணியாளர்கள் தரம் III இல் நியமனம் பெறுபவர்கள் குறிப்பிட்ட கால சேவையின் பின் பொருத்தமான செயற்பாடுகளுக்கூடாக தரம் II பதவிக்கு உயர்த்தப்பட்டு, அதற்குரிய சம்பள அளவுத் திட்டத்தில் ஊதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை ஆய்வுகூடப்பணியாளர்கள் பதவி உயர்வு விடயத்தில் கல்வி வலயத்திற்கு வலயம் மாறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் ஆய்வுகூடப் பணியாளர் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் ஒருசில கல்வி வலயங்களில் வருடக்கணக்காகப் பதவி உயர்வு வழங்குவது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது எனவும் கூறப்படுகின்றது.

ஒரே காலப்பகுதியில் நியமனம் பெற்றவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில் மாறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப் படுகின்றன பதவிஉயர்வுகள் வழங்குவதில் காலம்தாழ்த்தி இழுத்தடிப்பு செய்யப்படுவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தபோதிலும், மாவட்ட ரீதியில் ஐந்து கல்வி வலயங்களுக்கு இடையேயும் பொது நடைமுறையைப் பின்பற்றுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Prepared: by MRS.M.J.S.MUTHUKUMARASAMY
Koppai Maha Vidyalayam, Jaffna.

## Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர் 03

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

**T / 31 / I ENGLISH LANGUAGE One hour**

Part - 1

Answer all Questions

**Test - 01**

Fill in the blanks with the correct words given in brackets.The first one is done for you.
(and, in, to, an, in, by)

Dear Mary,
I am (1) ........in.........Agra today. Hope (2) .................... see Taj Mahal, we'll visit Red Fort (3) .................... the evening. I have visited Bangalore (4) .................... Madras. It's (5).................... enjoyable tour. I will return (6) .................... next month.
Mala

(1x5=5 Marks)

**Test - 02**

Complete the following dialogues. Use the words / phrases given below.The first one is done for you.

| ticket, take a bath, television, travel to Colombo, towel, watch a film |
|---|

01. A:- Excuse me. Have you got a (1) .....television..... here? I want to (2) ......................
B:- yes. It's in the living room.

02. A:- I want to (3) ......................... can I book a (4) .......................... now?
B:- Sorry bookings are over.


03. A:- Food is ready!
B:- Ok. I just want to (5) ......................... can you give me a (6) ...................... ?

04. A:- Yes. there is one in the bathroom.

(1x5=5 Marks)

**Test - 03**

Look at the picture and fill in the blanks with suitable words. first one is done for you.



This is a picture of Raja's (1) ......................... There are (2) .................. people in all. Mrs. Raja is (3) .................. a book. He is also eating a (4) ............................ Mrs. Raja is writing a (5) .................. with a (6) ...................... The baby on the floor is (7) .......................... with a ball. The girl on the sofa is pulling a (8) .......................... The boy is (9) ............................. a (10) ..................... match. The dog is (11) ............................ by the fire.

(1/2x10=5 Marks)

**Test - 04**

Read the following notice and complete the table given below.

NOTICE

All the students of st. Mary's College are requested to be present at the auditorium on 15th August 2008 at 9.00 a.m. The purpose of this meeting is to bid farewell to Mr.S. Joseph, who has been transferred immediately.

The Principal
St. mary's College, Jaffna.

| Participants | Date of the meeting | Time | Venue | Purpose of the meeting |
|---|---|---|---|---|
| | | | | |

(1x5=5 Marks)

**Test - 05**

Write sentences describing what is happening in the picture.



1)........................................................................................................
2)........................................................................................................
3)........................................................................................................
4)........................................................................................................
5)........................................................................................................

(1x5=5 Marks)

**Test - 06**

Imagine that you are the headprefect of your school. The principal asked you to prepare a set of instructions to be displayed in the school premises.

Example:- (1) At the canteen
put the polythene wrappers here.

2) At the library

3) At the cycle park

4) In the flower garden

5) Near the taps.

6) On the wall.

(1x5=5 Marks)

**Test - 07**

Read the following poem and answer the questions given below.

The Daffodils
I wandered lonely as a cloud.
That floats on high o'er vales and hills,
When all at once I saw a crowd.
A host, of golden daffodils:
Beside the lake, beneath the trees,
Fluttering and dancing in the breeze.
William Wordsworth.

01. What is the title of this poem?

02. Who is the author of this poem?

03. Where did the writer see the daffodils?

04. What were the daffodils doing?

05. Who is lonely as a cloud?

(1x5=5 Marks)

**Test - 08**

Write an article about an interesting place you visited. You may include the following:
a. Name of the place
b. How you went
c. What are the things you watched
d. your comments

C=2
L=3
(1x5=5 Marks)

**T / 31 / I Part - 2 Two Hours**

**Test - 09**

In each sentence there are two blanks.Select the correct word for blank (a) from the box A and blank (b) from the box B. The first one is done for you.

| A | B |
|---|---|
| brush | litter |
| observe | silence |
| collect | information |
| play | teeth |
| dump | cricket |
| consume | sugar |

01. Do not allow children to (a) ..........play.......... (b) ..........cricket.......... on the road.

02. In order to prevent tooth decay (a) ............................ (b) ............................ immediately after every meal.

03. To improve your knowledge and to (a) ............................ (b) ............................ read newspapers daily.

04. If you are overweight do not (a) ...................................... (b) ........................... and oil too much.

05. To keep your environment clean (a) ......................... (b) .......................... into a dustbin.

06. When you enter a place of worship (a) ............................ (b) ..............................

(1x5=5 Marks)

**Test - 10**

Read the following notice put by the Electricity Board and answer the questions given below.

Power interruption - Jaffna Area.

Consumers are kindly informed that the electricity supply to following areas will be interrupted from 8.a.m to 5 p.m as given below in order to carry out construction and maintenance work.

If the intended work could be completed beforehand, supply would be restored immediately there after.

| Date | Affected areas. |
|---|---|
| 17.10.2008 | Jaffna town, Ariyalai |
| 18.10.2008 | Kopay, Neervely |
| 19.10.2008 | Aanaipanthi, Nallur |
| 20.10.2008 | Chundikuli |

Any inconvenience caused to the consumers as a result of the interruption of supply is regretted.

Area Electrical Engineer
Ceylon Electricity Board
Jaffna.

01. Who put this notice?

02. Why do the Electricity Board interrupt the power supply?

03. How long will the power cut last?

04. Which areas will have no power supply on 18th October?

05. Will it be possible for the residents of chundikuli to watch the teledrama on T.V on the 20th of October at 2.p.m?

**Test - 11**

Match the questions with the answers. Write the numbers of the questions in the correct box. The

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

first one is done for you.

01. Where are you from?

02. How long do you plan to stay here?

03. Would you like to stay in an expensive hotel?

04. What about your food?

05. How do you like to travel, train or luxury coach?

06. Would you like to visit places of historical interest?

07. What about beaches and resorts?

08. How about a visit to our National Parks?

09. What do you think of the hill side?

10. Do you want to see waterfalls?

11. Shall I provide a guide to help you?

a. A luxury couch: I think will be comfortable for me. [5]

b. Of course: I'm very fond of bathing and swimming [ ]

c. Yes, I like to visit the ancient cities and museums. [ ]

d. I prefer Western or Chinese dishes. [ ]

e. I'm from Germany. [ ]

f. Well! I think a moderate tourist inn would do. [ ]

g. I really enjoy the sight of mountains and waterfalls in the hills. [ ]

h. I would like to visit Dunhinda and Diyaluma falls. [ ]

i. For about three weeks. [ ]

j. It could be the most interesting to watch the animal and plant life in the park. [ ]

k. With pleasure! He will explain me the things well. [ ]

(1/2x10=5 Marks)

**Test - 12**

Read the following text and underline the correct words that fill the blanks. One is done for you.

You probably know that dinosaurs were (1) (huge, fun, high) animals (2) (it, whose, that) once roamed the earth. But did you (3) (knew, know, known) that some dinosaurs were no (4) (big, biggest, bigger) than a chicken. (5) (Although, yet, when) one kind of dinosaur grew to be (6) (exactly, nearly, really) 40 feet long.Some were never more (7) (from, to, than) 2 feet from (8) (his, its, their) nose to the end of their tail. Some of (9) (this, these, that) reptiles were clumsy and slow moving (10) (but, and, so) others were quick and granceful. All dinosaurs did not (11) (live, lived, lives) at the same time, but altogether there were about five thousand different kinds of these reptiles.

(10 Marks)

**Test - 13**

You got to know that your friend has neglected his studies and was disobeying elders. Write a letter to your friensd 'kamal' advising him to stop this bad habit. Include the following in your letter.

* Say how you felt when you got this bad news.
* point out the bad effects of neglecting studies and disobeying elders.
* Invite him to your house and talk to him.

.....................................................................................

.....................................................................................

**Test - 14**

Write on one of the the following. Use about 100 words.

a. Computer.
b. Television
c. Telephone

**Test - 15**

Read the passage below, and answer the questions that follow.

The new diseases, as well as change in our style of living have exposed us to new dangers. Urban life has also increased our exposure to illness.

Sri Lanks has a rich variety of vegetables and fruits. Greens are a plenty in our country. However it is not easy to make greens safe for eating. If over cooked, their value, as a food is lost. Therefore they have to be washed thoroughly to make them clean. It is necessary to learn how to wash greens. Greens must always be washed with plenty of water. Water that gets clogged between the stem of a leaf and the trunk can trap the impurities.

some germs have a lot of resistance. Meat has to be cooked very well. We have to be careful with the knives and the boards used for cutting meat, especially chicken. Washing the knife and board alone does not help. Therefore it is best to keep the knife and board used for meat separate. The same board and knife should not be used for preparing salads. Any germ left over on the board or knife may enter the salad. This practice is very important when there is an epidemic such as the bird flu.

01. Say whether the following sentences are true or false by writing 'T' or 'F' in the space provided against each sentence.
   1) Sri Lanka has a rich variety of vegetables and fruits.
   2) Meat hasn't to be looked well.
   3) The spread of illness increased in urban areas.
   4) Vegetables need not be washed well.

(1/2x4=2 Marks)

02. What are the safety precautions one should follow in preparing vegetables?
   1).......................................................
   2).......................................................

(2 Marks)

03. Write two precautions you should take when preparing meat?
   1).......................................................
   2).......................................................

(2 Marks)

04. Is it advisable to keep a separate knife and board for meat?
   .......................................................................

(1 Mark)

05. Find words from the text that have a similar meaning to the following
   1) kind...............................
   2) essential...........................
   3) making...........................
   4) Sudden spread of disease...........................

(1/2x4=2 Marks)

06. Name the disease that affects birds badly these days?
   .......................................................................

(1 Mark)

**Test - 16**

Write an article on one of the following. Use about 200 words.

a. Library is a source of information.
b. How news comes to us.
   1) Basic news types.
   2) Editors and sections.
   3) Designing, printing and transporting.
c. Information and communication technology in Sri Lanka.
   1) Father of ICT in Sri Lanka.
   2) How to develop ICT .
   3) Communication system of the world.
d. Complete the follwing story.
   Last week when I was walking towards the Nallur temple, I saw a purse lying by the side of the street........

C-4
L-4 } (10 Marks)
O-2

## உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடரின்

# மாணவர்களுக்கான விசேட வெளியீடுகள்

**✦O/L மாணவர்களுக்கு:-** புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாவட்ட ரீதியிலான பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்கள் வெளிவருகின்றது.

திங்கள் - ஆங்கிலம், செவ்வாய்-வரலாறு, வியாழன்-கணிதம், வெள்ளி-தமிழ், சனி-விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்.

**✦தரம்-05 மாணவர்களுக்கு:-** வியாழக்கிழமைகளில் எமது கல்விச்சுடரின் மாவட்ட ரீதியிலான பிரபல ஆசிரியர்களின் தனித்துவ ரீதியிலான அரச புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளிவருகின்றது. வெகுவிரைவில் எதிர்பாருங்கள்.

**✦A/L மாணவர்களுக்கு:-** அனைத்துப்பாடங்களையும் உள்ளடக்கி கொழும்பு, யாழ், கண்டி, திருமலை ஆகிய மாவட்டங்களோடு ஏனைய மாவட்டங்களையும் சேர்ந்த பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள், கற்றல் குறிப்புக்களைத் தாங்கிவரும் தனியான வெளியீடு.

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள முகவரிடம் இன்றே முற்பதிவு செய்துகொள்ளுங்கள்

**கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு:-**

ஆசிரியர், உதயன்-கல்விச்சுடர், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.

தொலைபேசி: 021-2229933 / 0716850005 / 0714273035

தொலைநகல்: 021-2229944

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

03-11-2008 முதல்
09-11-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேசம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## இடபம்

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மிதுனம்

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியதடைஇருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர், உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன் னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

## கன்னி

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம்குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம்.

## துலாம்

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறும்.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லைஉண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறாது.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். துன்பங்கள் யாவும் விலகும்.

## மகரம்

உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடைஇருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது.

## கும்பம்

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப் பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.


**உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**
**யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
புலமைப்பரிசில் பரீட்சை - 2008


செல்வி ர.திவாஜினி
140புள்ளிகள்


செல்வி வி.நிலுக்ஷிகா
133புள்ளிகள்


செல்வன் யோ.ரனோஜன்
131புள்ளிகள்


செல்வி நீ.தர்மினி
129 புள்ளிகள்


செல்வி ந.இந்துஷா
124 புள்ளிகள்


செல்வி கோ.பிரபாலினி
122 புள்ளிகள்


செல்வி உ.சதுர்த்திகா
120 புள்ளிகள்


செல்வன் க.ஆதித்தன்
120 புள்ளிகள்


செல்வி உ.சுகிர்தா
120 புள்ளிகள்


செல்வி யோ.சுலோஜனா
116 புள்ளிகள்


செல்வன் ப.விதுர்சன்
115 புள்ளிகள்

யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து 2008 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்குறிப்பிட்ட மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவர்களது கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் இருந்த அதிபர் திருமதி செ.சுந்தரலிங்கம், ஆசிரியர்கள் திருமதி கோ.நித்தியபவானி, திருமதி [illegible] ஆகியோருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது மனப்பூர்வமான பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-பெற்றோர்.



2008 – தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சை

**வெற்றியாளர்களைக் கௌரவித்தல்**

**உதயன்** ஊடக அனுசரணையோடு

**மக்கள் வங்கி வழங்கும்**
**மகத்தான பதக்கத்திற்கான**

**மாபெரும் கௌரவிப்பு விழா**

இடம் : கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
காலம்: 09.11.2008(ஞாயிறு) காலை:9.00மணி
தலைமை : திரு.வே.கா.கணபதிப்பிள்ளை
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர் :
**உயர்திரு.கணபதிப்பிள்ளை ஆனந்தராஜா.**
(உதவிப் பொதுமுகாமையாளர், மக்கள் வங்கி,வடவலயம். யாழ்ப்பாணம்.)

கௌரவஅதிதி:
திரு.சு.ஹென்றி.
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி, யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.வி.அருளானந்தம். (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி)
திரு.க.பாலசுப்ரமணியம் (பொது முகாமையாளர், உதயன்.யாழ்ப்பாணம்)

விசேட விருந்தினர்கள்:
திரு.ஈ.எஸ்.பி.நாகரத்தினம் (ஈ.எஸ்.பேரம்பலம் அன் சன்ஸ்.)
லயன்.கலாநிதி.இ.சாந்தன் (தலைவர், லயன்ஸ் கழகம், மானிப்பாய் பரிஸ்.)
செல்வி. மலர் சின்னையா (அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

**நிகழ்ச்சி நிரல்:**
ஆரம்ப வைபவம்.
வரவேற்புரை. திரு.S.R.சத்தியேந்திரம்பிள்ளை. (உப பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி)
தலைமையுரை. ஆசியுரைகள். வாழ்த்துரைகள்.
அதிபர்கள், வளவாளர்கள்,மாணவர்கள் கௌரவிப்பு.
ஏற்புரை.
நன்றியுரை.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள் அதிபருடன் தொடர்புகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனாகி சாதனை படைத்தோர்



சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இளவாலை பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
வெற்றியீட்டிய மாணவர்கள் ,கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி, முன்னாள் ஓய்வுபெற்ற உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாலசிங்கம் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகளுடன் .
(படம்: நேசன்.)



தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. வெற்றியீட்டிய அணியினர் மத்தியஸ்தர்களுடன்.
(1-86)



இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப் பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீரர்கள், அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோருடன்.
(படம்:நேசன்.)

## விறுவிறுப்பான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் மகாஜனாவை வீழ்த்தி சம்பினயானது அருணோதயா

வலி.வடக்கு, நவ.3
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்றுவரும் 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் மோதினர்.

இரு அணியினரும் கோல்கள் பெற கடும் முயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் அது கைகூடவில்லை.

இந்நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணியினரும் கோல்கள் பெற வேண்டும் என்று பெரும் முயற்சியுடன் களமிறங்கி விளையாடினர்.

அந்த முயற்சிகள் மாறி மாறி எதிரணியினரின் பின்னணி வீரார்களாலும் கோல் காப்பாளர்களினாலும் தடுத்து நிறுத்தப்பட்டன. இந் நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகள் ஐந்தையும் அருணோதயாக் கல்லூரி முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது. அருணோதயாக் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யும் மோதிக் கொண்டதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை வென்று 3 ஆம் இடத் தைப் பெற்றுக் கொண்டது. (1-86)

## சிநேக பூர்வ ஆட்ட முடிவுகள்

வலி.வடக்கு, நவ.3
யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையே சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி கொண்டது.

16 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை 1:0என்ற கோல் கணக்கில் வீழ்த்தி புனித அந்தோனியார் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

18 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் புனித அந்தோனியார் கல்லூரியை வெற்றி கொண்டது. (04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## ஹாட்லிக் கல்லூரியை வென்றது யாழ்.சென்றல்: சோமிதரன் எட்டு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்

வலி.வடக்கு, நவ.3
இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் 'செலான்' வங்கி அனுசரணையுடன் 13வயதுப்பிரிவினருக்கு நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில்யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் ஓட்டங்களால் வென்றது.



சோமிதரன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 22.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

சிந்துஜன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

நிரூபன் 6.5 ஓவர்களில் 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சோமிதரன்8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 31 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

யூலியஸ் 17, ஜெயேந்திரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

வசிகரன் 6 ஓவர்கள் பந்து வீசி4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 5 ஓட்டங்க ளுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 33.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பிரதீப் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

சோமிதரன், யூலியன், நிரூபன் முறையே 17, 23, 30 ஓட்டங்களைக் கொடுத்து தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்சில் துடுப் பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 17 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

லோசன் 24 ஓட்டங்களை பெற்றார்.

பிரதீபன், கீர்த்திகன் முறையே 2,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். (86)

## 13 வயதுப் பிரிவு ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் 'ஏ' அணிக்கு வெற்றி

வலி.வடக்கு, நவ.3
இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் 'செலான்' வங்கியின் அனுசரணையுடன் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி முதல் இன்னிங்ஸில் ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ ' அணியும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 40 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துஷ்யந்தன் 33, துவாரகசீலன் 19, அருணோதயன் 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஆகாஸ், மயூரிகன் தலா2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 34.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிர்மலேந்திரா 29, வவேஸ் 22 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய துவாரகசீலன் 4 விக்கெட்டுக்களையும், கிரைன்ஸ் மயூசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 32 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

அனோகன் ஆட்டமிழக்காது 47, பிரிசங்கர் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரீபன்ராஜ், லிங்கராஜ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## சண்டிலிப்பாய்க் கோட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களின் தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

வலி.வடக்கு, நவ.3
சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் 10 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இடையேயான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**50 மீற்றர் ஓட்டம்**-அன்ரனி சென். யோசவ் ஜெனியொய்(இளவாலை மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), சுவாமிநாதன் பாலமுரளிதரன்(பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), ப.மிதுஷன் (மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்).

**75 மீற்றர் ஓட்டம்**-அன்ரனி சென்.யோசவ் ஜெனியொய்(இளவாலை மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), ப.மிதுஷன்(மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சி.லவன்(கட்டுடை சைவப்பிரகாச வித்தியாலயம்).

**பந்து எறிதல்**-யோகராசா லக்சனன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வராசா சஜீபன்(ஆனைக்கோட்டை பாலசுப் பிரமணியம் வித்தியாலயம்), ப.மிதுஷன்(நவாலி சென்.பீற்றர்ஸ் வித்தியாலயம்), கிருஷ்ணன் அனுஷன்(இளவாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை)

**குறிபார்த்து எறிதல்**-ஏ.ஜெயகாந் (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), பி.துஜீபன்(இளவாலை மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்கப்பாடசாலை), தநிஷாந்தன்(சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்),

**நீளம் பாய்தல்**-சி.துஷ்யந் தன்(பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), கிருஷ்ணமூர்த்தி டனுலக்ஷன்(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), விக்னேஸ்வரன் பிரிந்தன் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்).

### பெண்கள் பிரிவு

**50 மீற்றர் ஓட்டம்**-ஆரோக்கியநாதர் ஆன் சுவீற்றா(மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம்), சிந்துஜா(மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் வித்தியாலயம்), கருணாகரன் திவியா (பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

**75 மீற்றர் ஓட்டம்**-சிந்துஜா(மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ் வித்தியாலயம்),சசீந்திரன் கயல்விழி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), கபிரியேற்பிள்ளை டிறோஜினி (இளவாலை பெரியவிளான் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை).

**பந்து எறிதல்**-வேல்முருகு நியூசிகா (ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), வசந்தகுமார் வித்தியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெயபாலன் நிருத்திகா (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை)

**குறிபார்த்து எறிதல்**- காசிலிங்கசர்மா றஞ்சிதா(பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ஆரோக்கியநாதர் ஆன் சுவீற்றா(மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம்), லோ.தேனுகா (ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை)

**நீளம் பாய்தல்**- ச.ஜென்சி(மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்), சந்திரன் நிதுசினி(இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), ச.பிரியங்கா (ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை). (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி 23 கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு வங்கிக் கணக்குத் திறந்து கையளிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கண்ணபுரம் கிராம அபிவிருத்தி அமைப்புக்கும், நியாப் திட்டப் பணிப்பாளர் மு.விஸ்வலிங்கம் துறையாமூலை அபிவிருத்தி அமைப்புக்கும் வங்கிக் கணக்குப் புத்தகங்களைக் கையளிப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

# ஊடகத்துறை அமைச்சர் மீது வழக்குத் தொடுப்பார் மங்கள!

கொழும்பு,நவ.3

தனியார் தொலைக்காட்சிகளை அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள அரசு வர்த்தமானியில் கையெழுத்திட்டார் என்று கூறப்படும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவுக்கு எதிராகத் தாம் வழக்குத் தொடரப்போகிறார் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, மக்கள் பிரிவு கட்சியின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தனியார் தொலைக்காட்சிகளை அரசின் காலடியில் போடும் நோக்கில் அரசு புதிய ஊடகக் கொள்கை ஒன்றை வர்த்தமானியின் ஊடாக வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் முழுக்க முழுக்கப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினது தயாரிப்பாகும். ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவுக்கு தெரியாமல்தான் இந்த கொள்கை தயாரிக்கப்பட்டது என்று நாம் அறிகிறோம்.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளரின் ஊடாகத்தான் இந்தப் புதிய கொள்கை உருவாக்கம் பற்றி ஊடகத்துறை அமைச்சர் தெரிந்து கொண்டாராம்.

அப்படிப்பட்ட அமைச்சர் இந்த வர்த்தமானியில் கையெழுத்திட்டிருக்கிறார். ஊடகங்களை அடக்கும் இந்த வர்த்தமானியில் அமைச்சர் கையெழுத்திட்டமைக்காக அவருக்கு எதிராக நாம் வழக்குத் தாக்கல் செய்யப்போகிறோம் - என்றார்.

(சி)


## IIS

கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 01. | → 07.11.2008 | காலை 10.00 மணி |
| பிரிவு 02. | → 08.11.2008 | |

**Diploma Courses**

01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerised Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System.

**Certificate Courses**

01. Certificate in Auto CAD
02. Certificate in Java Programming
03. Certificate in Visual Basic Programming



IISன் 2008ம்

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933


## 5ஆம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 04 11 1955 — ஆண்டவன் அடியில் 03 11 2003



### அமரர் இரத்தினகோபால் சிவராசா

அன்பே உருவமாய்
பண்பிலும் பாசத்திலும் உறைவிடமாய்
இறைவனோடு சேர்ந்து ஐந்து
வருடங்கள் சென்றாலும் உங்கள்
புன்னகை உருவம் நிழலாய் பதிந்து
தரும் வேதனையில் நனைகின்றோம்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

க.மோகனச்செல்வன் (குமரன்)
(மைத்துனர்)
6/6 B, ஈச்மோட்டை விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சி/555173)

மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரன்

## ஈழத் தமிழர் மறுவாழ்வுக்கு சப்பாத்து மெருகூட்டி நிதி சேகரிக்கும் இளைஞர்

சென்னை, நவ.3

இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக இந்தியாவின் நெல்லையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பஸ் நிலையத்தில் இருந்து சப்பாத்துகளுக்கு மெருகூட்டி பணம் சேகரித்து வருகின்றார்.

பாபுராஜ் (வயது 30) என்ற இளைஞரே இவ்வாறு இலங்கைத் தமிழருக்காக நிதி சேகரித்து வருகின்றார். குறிப்பிட்ட கட்டணம் என்றில்லாமல் நன்கொடையாக எவ்வளவு தந்தாலும் வாங்கிக் கொள்கின்றார். (202)

## பொலிகண்டி சின்னாவளை நலன்புரி நிலையத்துக்கு குடிதண்ணீர் விநியோகம்

வடமராட்சி, நவ.3

பொலிகண்டி மேற்கிலுள்ள சின்னாவளை நலன்புரி நிலையத்துக்குத் தேவையான குடிதண்ணீர் விநியோகத்தை வல்வெட்டித்துறை நகரசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

25 குடும்பங்கள் வாழும் இந்த நலன்புரி நிலையத்தில் இரு நாள்களுக்கு ஒரு தடவை ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.(202-236)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில, ஆங்கிலத்தில் சிறந்த புள்ளிகள் பெற O/L, A/L, B.A வினாவிடை, இலக்கண வகுப்புகள் By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
426,K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.



**ஒத்துமாறல்**

மேல்மாகாணத்தில் சங்கீத பட்டதாரி ஆசிரியராக பணிபுரியும் ஒருவர் யாழ்.வலயத்தில் பணி புரியும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். அவ்வாறு ஒத்துமாற விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(79618) தொ.பே.0775581556


## யாழ்.கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் சிவகுமாருக்கு உயர் நூலுக்கான விருது

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வித்துறை விரிவுரையாளர் தம்பிராசா சிவகுமாருக்கு 2007ஆம் ஆண்டுக்கான இலக்கிய நூல் பரிசில் தேர்வில் உயர்நூலுக்கான விருது கிடைத்துள்ளது.

அவர் எழுதி வெளியிட்ட 'விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்' என்னும் நூலுக்கே வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இந்த விருதை வழங்கியுள்ளது.

இவருக்கு விருது கிடைத்ததைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(202)


## நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்



வழிகாட்டும் முதலாவது இலங்கைத் தமிழ்நூல். புதிய பாடநூல்களிலுள்ள பாடங்களுக்கான விளக்கங்கள் விமர்சனங்களுடன் எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. எங்கும் கிடைக்கும்.

266 பக்கங்கள் ரூபா 300/=


## ஏழாலை - அத்தியடி முருகமூர்த்தி ஆலயம் பட்டம் சூட்டிக் கௌரவிப்பும், ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்கலும்

இன்று (03.11.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தில் பதினைந்து வருடங்களாகக் கந்தபுராண படனம் நடத்திவரும் சிவஸ்ரீ மு.சோமசுந்தரக் குருக்கள் அவர்களை சிவத்தமிழ் வித்தகர் திரு.சிவமகாலிங்கம் அவர்கள் "பௌராணிக வித்தகர்" என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிப்பார். அன்று மேற்படி ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரான ஏழாலை விளிசிட்டி அமரர் ம.கந்தையாவினதும் பாரியாரினதும் ஞாபகார்த்தமாக அவர்களது பிள்ளைகளால் புலமைப் பரிசில் வழங்கலும் நிகழவுள்ளது.

புலமைப் பரிசில் பெறுவோர்:-
1.செல்வி ப.மைத்திரேயி
2.செல்வன் சி.சிவதர்சன்
3.செல்வன் சி.சிவப்பிரசன்னா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.சிவஞானசுந்தரம்
ஆலய அறங்காவலர்.

(79611)

## மரண அறிவித்தல்



### திருமதி வடிவேலு நவசக்தி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு நவசக்தி 01.11.2008 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- லெட்சுமிஅம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் வடிவேலு அவர்களின் அன்பு மனைவியும் பிறேமசுதா, மயூரேசன் ஆகியோரின் அன்புத் தாயும் தவநாதன், டிலாயினி ஆகியோரின் அன்பு மாமியும் வித்தியா, லக்சுமி, லவன் ஆகியோரின் பேர்த்தியும் நாகேஸ்வரி, நிகமவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.11.2008 புதன்கிழமை மாலை 5 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"லக்சுமி பவனம்",
சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
செல்வராசா (மருமகன்).

(79620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிக் கூட்டத் தீர்மானங்களில் ஒன்றுகூட செயற்படுத்தப்படவில்லை

## டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 3

தமிழக அரசின் சார்பில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று கூட செயற்படுத்தப்படவில்லை. அத்தனை தீர்மானங்களும் கிடப்பில் போடப்பட்டு விட்டன.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இலங்கையில் உடனடியாக சண்டை நிறுத்தப்பட வேண்டும். இதுதான் அங்குள்ள தமிழர்களுக்கு உண்மையான நிவாரணம்.

இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அரசியல் தீர்வுக்கான அமைதிப் பேச்சு தொடங்கப்பட வேண்டும். சண்டை நிறுத்தப்பட்டால் அவர்களுக்கான நிவாரணத்தை இலங்கைத் தமிழர்களே தேடிக்கொள்வார்கள்.

'இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ள மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த முக்கியமான தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? உறுதி மொழிகள் என்ன? ஒன்றும் இல்லை. இதில் மத்திய அரசை செயற்பட வைப்பதில் என்ன சிக்கல்? என்ன நடந்தது என்பதை முதல்வர் கருணாநிதி விளக்க வேண்டும்.



இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசின் கவனத்தை ஈர்க்க, ஒக்ரோபர் 24ஆம் திகதி மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தப்பட்டது. அன்றைய தினம் அறிக்கை வெளியிட்ட முதல்வர் கருணாநிதி, ''நாம் நம்பிக்கை கொள்கின்ற அளவுக்கு, பிரதமர் நடவடிக்கை எடுத்து வருகிறார்'' என்றார்.

அது முதல், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசின் வேகம் குறையத் தொடங்கி விட்டது. இதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார். இதன் தொடர்ச்சியாக, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டு விட்டன.

இலங்கையில் நமது சொந்தங்கள் கொல்லப்படுகிறார்கள், அங்குள்ள குழந்தைகள் குண்டுவீசி அழிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு எப்போதாவது தமிழர்களுக்கு ஏற்படுகிறது. அதனால், பொங்கி எழுகின்றோம்.

ஆனால், பொங்கி எழுந்த வேகத்திலேயே அந்த உணர்வு அடங்கிப் போய்விடுகிறது. கடந்த மாதம் தமிழகத்தில் நடந்த நிகழ்வுகள் அப்படிப்பட்டவைதான் - என்றார்.

# 'எமக்காகவும் பேசுங்களேன்' வீட்டுக்கதவைத் தட்டும் டி.வி.டி.

இலங்கை தமிழர்களின் துயரங்களையும் அவர்கள் படும் அவலங்களையும் சித்திரிக்கும் 'எமக்காகவும் பேசுங்களேன்' என்ற 'டி.வி.டி' சேலம் உட்பட பல நகரங்களில் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் வீடுகளில் ரகசியமாக போடப்படும் இந்த டி.வி.டிகளை விநியோகிப்பது யார் என்பது மர்மமாக உள்ளது. தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு திடீரென ஆதரவுக் குரல் எழுந்துள்ள சூழலில், இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் டி.வி.டிகள் ஒவ்வொரு வீட்டு கதவையும் தட்டத் தொடங்கியுள்ளன.

டி.வி.டியில் முதல் காட்சியே விமானம் குண்டுமழை பொழியும் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. சீருடையுடன் பாடசாலைக்குச் செல்லும் சிறுமியர் பதுங்கு குழிக்குள் பதறியவாறும், கதறியவாறும் பதுங்கின்ற காட்சி அடுத்து வருகிறது. குண்டு தாக்குதலால் ஒற்றை கண்ணை இழந்த குழந்தை வைத்தியசாலையில் அன்னை மடியில் உறங்கும் காட்சி, தப்பித்த குழந்தை முகம் முழுக்க வெடிகுண்டு சிதறல்களால் உருவான கொப்பளங்களுடன் இருக்கும் கோரக் காட்சி என்ற பின்னணியில் எமக்காவும் பேசுங்களேன் என்று வெள்ளை எழுத்து வருகிறது.

விமானம் குண்டு போட்டுச் சென்ற பின் அந்த இடத்தில் கொழுந்து விட்டு எரியும் தீ, தீப்பற்றிய வாகனங்கள் வாகனங்களில் சென்றவாறே இறந்து கிடப்போர் என்று அனைத்துமே படமாக்கப்பட்டு உள்ளன.

அதில், தமிழன் என்றும் ஓய மாட்டான். இலங்கையில் தமிழனை அழிக்க முடியாது என்ற நம்பிக்கை வரிகள் பாடலில் இடம் பெற்றுள்ளன. 'ஈழத் தமிழனைக் காக்க தமிழகத்தால்தான் முடியும். இல்லையேல் இங்கேயே செத்து மடிகிறோம்'' என்ற நெஞ்சை உருக்கும் பேச்சும் இடம்பெற்றுள்ளது. இரவு நேரங்களில் வீட்டுக்கு வீடு டி.வி.டி. விநியோகம் தொடர்கிறது எனக் கூறப்படுகிறது.

# ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக விரைவில் அனைத்துக்கட்சிக் கூட்டம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் திட்டம்



புதுடில்லி, நவ.3

ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசு கைவசம் என்ன தீர்வு வைத்துள்ளது என்பது குறித்துத் தெளிவுபடுத்தவேண்டும். இதை வலியுறுத்தும் நோக்கில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டப்போகிறோம் என இந்தியக் கம்யூனிஸ்ட் தெரிவித்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் தா.பாண்டியன் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் வைத்து இது குறித்து கூறியதாவது:

இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டும். அங்கு வசிக்கும் தமிழர்கள் தொடர்பாக இனப்பிரச்சினையில் என்ன மாதிரியான தீர்வைத் தனது கைவசம் வைத்துள்ளது என்பதை இலங்கை அரசு தெளிவுபடுத்தவேண்டும். இதை வலியுறுத்தும் நோக்கில் விரைவில் சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் ஏற்பாடுசெய்யும்.

இந்தக் கூட்டத்திற்கு தி.மு.க., - அ.தி.மு.க., ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும். இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒன்றும் அரசியல் பிரச்சினை அல்ல. மூன்றரை லட்சம் தமிழர்கள் அங்கு அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். 150 பேர் கடந்த சில மாதங்களில் மட்டும் பாம்புக் கடிக்கு ஆளாகி இறந்துள்ளனர். இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமெனக் கூற மத்திய அரசு ஏன் தயங்குகிறது என்பது தெரியவில்லை. பிரணாப் முகர்ஜி மற்றும் தமிழக முதல்வர் சந்திப்பின் போது போர்நிறுத்தம் குறித்துப் பிடிகொடுத்து ஏன் பேசப்படவில்லை. இந்தச் சந்திப்பின் மூலம் எந்தவொரு உறுதியும் வழங்கப்படவில்லை -என்றார்.

# இந்தியச் செய்திகள்

# இலங்கையில் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும்

## பிரகாஷ் கரத்



சென்னை, நவ. 3

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசுக்கு இந்தியா நெருக்குதல் கொடுக்க வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலர் பிரகாஷ் காரத் வலியுறுத்தி உள்ளார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் செயற்குழு மற்றும் மரநிலக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக சென்னை வந்த அவர், செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் பேட்டியளிக்கையிலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு வருமாறு-

இலங்கையில் நடைபெறும் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் பற்றி, தமிழகம் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் கவலை அடைந்துள்ளனர். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கும், போர் நிறுத்தம் செய்வதற்கும் இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு சுய ஆட்சி வழங்க வேண்டும். அதே சமயம் ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளடங்கியதாக இத்தீர்வு அமைய வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு மார்க்சிஸ்ட் கட்சி முழு ஆதரவு தெரிவிக்கிறது. அதேநேரம் விடுதலைப்புலிகளை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களுக்கு உணவு, உடை, மருந்துப் பொருள்கள் கிடைப்பதை இந்திய அரசு உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

# மஹிந்தவின் நாடகத்தை மத்திய-மாநில அரசுகள் தடுத்துநிறுத்தி ஈழத் தமிழரைக் காக்க வேண்டும்

## விஜயகாந்த்

மஹிந்த ராஜபக்ஷ நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த நாடகத்தை மத்திய-மாநில அரசுகள்தான் தட்டிக் கேட்க வேண்டும். அங்குள்ள ஈழத் தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும் - என்று தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன்தினம் நடந்த உண்ணாவிரதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு-

1983இல் நானும் ராதாரவியும், எஸ்.எஸ். சந்திரன், சந்திரசேகர் ஆகிய நால்வரும் ஈழத் தமிழர்களுக்காக உண்ணாநிலைப் போராட்டம் இருந்துள்ளோம். ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளோம்.

நிதி திரட்ட நாடகம் நடத்தி உள்ளோம். இன்று வரை இந்த பிரச்சினைக்காக போராடுகிறோம். மத்திய- மாநில அரசை விமர்சனம் செய்யக்கூடாது என்கிறார்கள். நமக்கு விமர்சனம் செய்ய உரிமை உண்டு.

பாகிஸ்தானில் 200 பேர் செத்தால் பாவம் என்கிறோம். அது மனிதாபிமானம். அது போலத்தான் ஈழத்தமிழர்கள் மீது நாம் காட்டுவதும்.

தே.மு.தி.க. இளைஞர் அணி மாநாட்டில், ஈழத்தமிழர்களுக்கு சம உரிமை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம். ஈழத் தமிழர்கள் மீது தேவை இல்லாமல் குண்டு போடுகிறார்கள். அதை நிறுத்த வேண்டும்.



மஹிந்த ராஜபக்ஷ மனிதாபிமானத்தை கொஞ்சமும் கடைப்பிடிக்கவில்லை. அங்கு மக்கள் சரிசமமாக நடத்தப்பட வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் கறுப்புப் பட்டி அணிந்து வந்துள்ளோம். தே.மு.தி.க. சார்பில் மாவட்டம் தோறும் நிதி வசூலித்து கொடுத்து வருகிறோம்.

ஈழத்தமிழன் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?. இதில் நான் நிறையப் பேசினால் அது அரசியலாகி வேறுவிதமாகப் போய் விடும். எனவே, நான் இங்கு கட்டுப்பட்டுத்தான் பேச வேண்டியதுள்ளது.

ஈழத் தமிழர்கள் பிரச்சினையை மத்திய - மாநில அரசுகள் தீர்த்து வைக்க வேண்டும் - என்றார்.

# சிங்களத் தீவிரவாதத்தால்தான் ஈழத் தமிழர் ஆயுதம் ஏந்தினர்!

## நடிகர் சத்யராஜ்

சென்னை, நவ. 3

சிங்களத் தீவிரவாதத்தால்தான் தமிழன் ஆயுதம் ஏந்தினான் - என்று உண்ணாவிரதப் போராட்டத்தில் நடிகர் சத்தியராஜ் தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு- இலங்கையில் யாரும் குண்டுவீசி கொல்லப்படவில்லை. எல்லோரும் சர்க்கரை நோய் போன்ற உடல்நலம் இல்லாமல்தான் இறந்து போயிருக்கிறார்கள். செஞ்சோலை என்கின்ற இடத்தில் பாடசாலையின் மீது குண்டுவீசியபோது கூட போராளிகள் பதுங்கியிருந்ததால் குண்டு வீசினோம் என்று சிங்கள அரசு தெரிவித்தது. அதைக் கேட்டு இளிச்ச வாயங்க நாமும் நம்புகிறோம்.

நடிகர் எஸ்.ஜே.சூர்யா பேசும்போது - இலங்கைத் தமிழர்களை இங்கு அழைத்து வந்து மதுரை, சேலத்துக்கு பக்கத்தில் இடம் கொடுத்து தங்கவைக்க வேண்டும் என்று யோசனை கூறினார். தமிழன் இலங்கைக்குப் பிழைக்கப் போய் அங்கு பிரச்சினை செய்கின்றனர் என்று யாரும் கருதக்கூடாது என்று தொல்.திருமாவளவன் தெளிவாகக் கூறினார். தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

ஒரிசாப் பகுதியில் இருந்து இலங்கைக்குச் சென்று குடியேறிவர்கள்தான் சிங்களவர்கள். அவர்கள் எண்ணிக்கையில் அதிகம் இருப்பதாலே சிங்கள நாடு என்று கூறுகிறார்கள். இலங்கையில் வந்தேறியவர்களைத் துரத்த வேண்டும் என்றால், நியாயமாகப் பார்த்தால் அங்கிருந்து சிங்களவர்களைத்தான் துரத்த வேண்டும். அவர்களுக்குத்தான் சேலம், மதுரை பக்கத்தில் இடம்கொடுக்க வேண்டும்.



இலங்கையில் கல்வி, வேலை வாய்ப்பில் சமஉரிமை இல்லை. யாரும் சும்மா சண்டை போடுவதில்லை. உயிரைப் பணயம் வைத்து சண்டை போட மாட்டார்கள். சிங்களத் தீவிரவாதத்தால்தான் தமிழன் ஆயுதம் ஏந்தினான்.

இனப் படுகொலை நடைபெறும் இலங்கையில் உடனே போர் நிறுத்தம் செய்ய வேண்டும். பிறகு அமைதிப் பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். அதில் தமிழனுக்கு எத்தகைய உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பது கடைசித் தமிழன் வரை படித்துக் காட்டப்பட வேண்டும்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஈழத் தமிழர்களால் உங்களுக்கு ஏற்பட்ட வலிகள், ரணங்களை உங்களது சந்ததிகளுக்குச் சொல்லி தமிழ் உணர்வு குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் உணர்வால் பேசுபவர்கள் மீது சட்டம் பாயக்கூடாது. ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும் அனைவரும் ஈனத்தனமானவர்கள் - என்றார்.

# ஈழத்தமிழர்கள் நலன் காக்க பிரதமருக்கு தந்தி அனுப்புக!

## நடிகர் விஜய் ரசிகர்களுக்கு வேண்டுகோள்



உண்ணாவிரதப் போராட்டத்தில் நடிகர் விஜய் பேசியவைவருமாறு-

ஈழத்தமிழர்கள் இருப்பதற்கு இடம் இல்லாமலும், உடுக்க உடை இல்லாமலும், உண்ண உணவு இல்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்காக நாங்கள் ஒருநாள் உணவு இல்லாமல் இருக்கக் கூடாதா?. அதற்காகத்தான் உண்ணாவிரதம் இருக்கிறோம்.

என்னை நேசிக்கும் என் ரசிகர், ரசிகைகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். 'ஈழத்தில் போர் நிறுத்தம் முடிவுக்கு வரவேண்டும். அங்கு தமிழ் மக்கள் நலன் காக்கப்பட வேண்டும்' என்று எழுதி எல்லோரும் இந்திய பிரதமருக்கு தந்தி கொடுக்க வேண்டும்.

அடுத்த 24 மணிநேரத்தில் 10 லட்சம், 20 லட்சம், 50 லட்சம் என்று குறைந்தது ஒரு கோடி தந்திகள் பிரதமருக்குச் சென்று சேரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஈழத்தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்கட்டும்.

எனது ரசிகர்கள் மட்டுமின்றி, தமிழ் இன உணர்வு கொண்ட அத்தனைபேரும் தந்தி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நாளை

வாஷிங்டன்,நவ.03

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் முறை மிகவும் வித்தியாசமானது. நாளை நடக்கும் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்கள் நேரடியாக போட்டியிடுவதில்லை. ஜனாதிபதி வேட்பாளர் சார்பில் நிற்கும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் தான் ஒவ்வொரு மாகாணத்திலும் நிற்கிறார்கள். இவர்களுக்குத்தான் அமெரிக்க மக்கள் வாக்குப் போடுவார்கள். ஒபாமாவுக்கோ அல்லது மெக்கைனுக்கோ யாரும் நேரடியாக வாக்குப் போட மாட்டார்கள்.

மாகாணங்கள் வாரியாக தெரிவான தேர்வுக் குழு உறுப்பினர்கள் டிசெம்பர் 15 இல் கூடி வாக்களித்து ஜனாதிபதியை தேர்வு செய்வர். இந்தத் தேர்வுக்குழு உறுப்பினர்களைத்தான் ''எலக்ட்ரல் கொலேஜ்'' என்று அழைக்கிறார்கள். ஒவ்வொரு மாகாண மக்கள் தொகைக்கு ஏற்ப 3 முதல் 55 வரை தேர்வுக்குழுவினரின் எண்ணிக்கை மாறுகிறது. தேர்வுக்குழுவினரின் மொத்த எண்ணிக்கை 538.

ஒவ்வொரு மாகாணத்திலும் அமெரிக்க நாடாளுமன்றில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு இணையான எண்ணிக்கை கொண்ட தேர்வுக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அமெரிக்க ஜனாதிபதியை தேர்வு செய்தவுடன் இந்தத் தேர்வுக்குழு உறுப்பினர்கள் கலைந்து விடுவார்கள். இவர்களுக்குப் பதவிக்காலம் கிடையாது.

அரசியல் சாசனத்தின் படி, தேர்வுக்குழு உறுப்பினர்கள் தங்களுக்குப் பிடித்த ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்கலாம். ஆனால் சில மாகாணங்கள் இயற்றியுள்ள சட்டத்தின் படி, கட்சி மாறி வாக்களிக்கும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் மீது அமெரிக்க நாடாளுமன்ற வழிகாட்டுதல்களின் படி நடவடிக்கையும் எடுக்கப்படும். தேர்தல் நடைமுறை தேசிய அளவில் பொதுவானதாக இருந்தாலும், மாகாணங்கள் சில தங்கள் வசதிக்கு ஏற்ப தேர்வுக்குழு உறுப்பினர் தேர்வில் சில நடைமுறைகளை கடைப் பிடிக்கின்றன.

பெரும்பான்மை எண்ணிக்கையில் தேர்வுக் குழு உறுப்பினர்களைப் பெறும் கட்சிக்கே ஒட்டுமொத்த மாகாண வாக்குகளை அளிக்கும் நடைமுறையையும் சில மாகாணங்கள் கடைப் பிடிக்கின்றன. மொத்தமுள்ள 538 வாக்குகளில் 270 வாக்குகள் பெறுபவருக்குத்தான் அங்கு ஜனாதிபதிப் பதவி.

மெக்கைன் 1936 ஓகஸ்ட் 29ஆம் திகதி பிறந்தார். இவரது பெற்றோர் ஜோன் மெக்கைன், ரொபர்ட்டா. மெக்கைன், யுனைட்டட் ஸ்டேட்ஸ் நேவல் அகாடெமியில் சேர்ந்து பட்டம் பெற்றார். 1965இல் கேரல்ஷெப் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார்.

இவர்களுக்கு சிட்னி என்ற மகள் பிறந்தார். வியட்நாம் போரின் போது மெக்கைன் விமானப்படையைச் சேர்ந்த வீரராகப் பங்கெடுத்துக் கொண்டார். அங்கு பிடிபட்டு போர்க் கைதியாக ஐந்தரை ஆண்டுகளைக் கழித்தார். பின்னர் 1980இல் விவாகரத்துப் பெற்று இரண்டாவது மனைவியாக சின்டியை திருமணம் செய்தார். இவர்களுக்கு மேகன் என்ற மகளும் ஜோன், சிட்னி என்ற மகன்களும் உள்ளனர். 1983 ஆம் ஆண்டு அரிசோனாவில் இருந்து அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைக்கு மெக்கைன் தேர்வு செய்யப்பட்டார். 1987 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க செனட்டராகப் பதவி வகிக்கிறார்.

பராக் ஹுசைன் ஒபாமா அமெரிக்காவின் ஹோனலுலுவில் 1961 ஓக. 4ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை பராக் ஒபாமா கென்யாவைச் சேர்ந்தவர். தாய் அமெரிக்காவை சேர்ந்த ஆன் டன்ஹம். இவருக்கு இரண்டு வயதாகும் போதே இவரது பெற்றோர்கள் விவாகரத்துப் பெற்று பிரிந்தனர். ஒபாமா 10 வயது வரை இந்தோனேஷியாவில் வசித்தார். பின்னர் ஹோனலுலுக்கு திரும்பி பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தார். 1988 இல் ஹார்வர்ட் சட்டக் கல்லூரியில் படித்தார். மிஷல் ஒபாமாவை திருமணம் செய்து கொண்டார். 1997 ஆம் ஆண்டு இல்லினாய் செனட் உறுப்பினராக தேர்வானார். 2005ஆம் ஆண்டு முதல் அமெரிக்க செனட்டின் உறுப்பினராக தொடர்கிறார். இவருக்கு மலியா, ஷாஷா என 2 புதல்விகள் உள்ளனர்.

## ஆப்கான் நிதியமைச்சரின் சகோதரர் கடத்தப்பட்டார்

பெஷாவர்,நவ. 03

ஆப்கானிஸ்தான் நிதியமைச்சர் அன் வருல் ஹக் அகாதியின் சகோதரர் ஜியாவுல், பாகிஸ்தானிலுள்ள பெஷாவர் நகரில், சனிக்கிழமை இனந்தெரியாத கும்பலொன்றால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார்.

பெஷாவரில் ஜியாவுல்லின் உறவினர்கள் வசித்து வருகிறார்கள். இவர் வழக்கம் போல வந்து உறவினர்களைச் சந்தித்துவிட்டுத் திரும்பும் போது இந்த மர்மக் கும்பலால் கடத்தப்பட்டுள்ளார் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானுக்குத் திரும்புவதற்கு முன்னர், பெஷாவரிலுள்ள மசூதி யொன்றுக்குச் சென்று தொழுகையை முடித்துக் கொண்டு வெளியேறிய சமயத்தில், காரில் வந்த மர்மக் கும்பலால் இவர் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளார் என்றும் அது விவரித்தது.

ஜியாவுல் முன்னர் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பின்னர் அதிலிருந்து ஒதுங்கினார். இப்போது வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார்.

உலக அரங்கில்

## பாகிஸ்தானில் மீண்டும் நில அதிர்வு

இஸ்லாமாபாத்,நவ.03

பாகிஸ்தானில் கடந்த புதன்கிழமை பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் சனிக்கிழமை காலை 6மெணி அளவில் நில அதிர்வு ஏற்பட்டது.

தென் மேற்கு பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் ஜியாரத் மற்றும் பிஷின் மாவட்டங்களில் கடந்த புதன்கிழமை கடும் பூகம்பம் ஏற்பட்டது. இதில் 300 க்கும் அதிகமானோர் இறந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர்.

இந்நிலையில், அதே பகுதியில் புதன்கிழமைக்குப் பின்னர் 250 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. அதில் சனிக்கிழமை காலை ஏற்பட்ட நில அதிர்வின் தாக்கம் 5.4 புள்ளிகளாக ரிச்டர் அளவுகோலில் பதிவானது.

இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் கடும் அச்சம் அடைந்தனர். இப்பகுதிகளில் நிவாரணப் பணிகளை யுனிசெப் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

ஜியாரத் மற்றும் பிஷின் மாவட்டங்களில் 1 லட்சத்து 8 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 50 சதவீதம் பேர் குழந்தைகள். உறைபனி அளவுக்கு கடும் குளிர் நிலவுகிறது. இதனால் தொடர்ந்தும் ஒதுங்கக் கூட இடமின்றி மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

கடும் குளிர் காரணமாக குழந்தைகளுக்கு நிமோனியா, வயிற்றுப் போக்கு ஆகியன ஏற்படுகின்றன. நிலநடுக்கம் காரணமாக குடிதண்ணீர் ஆதாரங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமையால் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பது பெரும் பிரச்சினையாகி உள்ளது.

எனினும், நிவாரணப் பணிகளுக்காக 15 ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களும் பணியாற்றுகின்றனர் என உள்துறை அமைச்சகத் தலைவர் ரெஹ்மான் மாலிக் தெரிவித்தார்.

# சந்திராயன் அனுப்பிய பூமியின் முதற்படம்




புதுடெல்லி,நவ.03

நிலவுக்கு அனுப்பப்பட்டுள்ள சந்திராயன் விண்கலம் முதன்முதலாக பூமியைப் படம் பிடித்து அனுப்பியுள்ளது. இப்படங்களை இஸ்ரோ ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

10 நாள்களுக்கு முன் பி.எஸ்.எல்.வி மூலம் நிலவுக்கு அனுப்பட்டு தற்போது நிலவுக்கான வழியில் பாதித் தூரத்தை அடைந்துள்ள சந்திராயன் பூமியைப் படம் பிடித்து அனுப்ப ஆரம்பித்துள்ளது.

அதிலுள்ள டெர்ரைன் மெப்பிங் காமரா முதல் படமாக ஆஸ்திரேலியாவின் வடக்கு கடற்கரைப் பகுதியை படம் பிடித்து அனுப்பியது. இந்தப் படம் 19ஆம் திகதி காலை 8 மணிக்கு எடுக்கப்பட்டது. அப்போது, சந்திராயன் பூமியிலிருந்து 9,000 கி.மீ உயரத்தில் பறந்தது.

இதையடுத்து 12.30 மணிக்கு ஆஸ்திரேலியாவின் தெற்கு கடலோரப் பகுதியை சந்திராயன் படம் பிடித்து அனுப்பியது. அப்போது அது பூமியிலிருந்து 70,000 கி.மீ உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

இந்தப் படங்களை இஸ்ரோ ஆய்வு மையத் தலைவர் மாதவன் நாயர் பிரதமர் மன் மோகன் சிங்கிடம் காட்டினார். அவர் பெரும் ஆர்வத்துடன் அதைப் பார்த்து தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

சந்திராயன் நிலவை நெருங்கிய பின் அதைப் படம் பிடிக்க ஆரம்பிக்கும். இப்போது அது நீள்வட்டப் பாதையில் பூமியை சுற்றிக்கொண்டிருக்கிறது. இப்போது அதற்கும் பூமிக்கும் இடையிலான குறைந்த பட்ச தூரம் 465 கிலோ மீற்றராகவும் அதிகபட்ச தூரம் 2,67,000 கிலோ மீற்றராகவும் உள்ளது.

இந்த உயரம் அடுத்த 5 நாட்களில் மேலும் அதிகரிக்கப்பட்டு நிலவின் சுற்றுப் பாதைக்கு கொண்டு செல்லப்படும். பூமியிலிருந்து நிலா 3,84,000 கி.மீ தொலைவில் உள்ளது.

## இந்தோனேஷியாவில் பூகம்பம்!

ஜகார்த்தா,நவ.03

இந்தோனேஷியாவின் மலுகு மாகாணத்திலுள்ள சாம்லகி நகருக்கு வட மேற்கே, 267 கிலோ மீற்றர் தொலைவில், சனிக்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் குலுங்கின. மக்கள் வீடுகளை விட்டு, பீதியால் வெளியே ஓடினார்கள்.

உள்ளூர் நேரப்படி காலை 10.34 மணிக்கு ஏற்பட்ட இப்பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.8 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என பூகற்வியல் ஆய்வு மையம் தெரிவித்தது. பூமிக்கடியில் 30 கிலோ மீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் மையங் கொண்டிருந்தது என்றும் அது குறிப்பிட்டது. எனினும் சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

இந்தோனேஷியாவில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஏற்பட்ட பூகம்பத்தை அடுத்து எழுந்த சுனாமிப் பேரலை அனர்த்தங்களுக்கு, அந்நாட்டில் 1 லட்சத்து, 68 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்; நான்கு பொலிஸார் உட்பட 8 பேர் பலி!

இஸ்லாமாபாத், நவ.03

பாகிஸ்தான் மர்தான் நகரில் வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினர். இதில் 4 பொலிஸார் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

பொலிஸ் அதிகாரி அலி ஷாவை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. செய்தியாளர்கள் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு அலி ஷா வீடு திரும்ப முற்பட்டார். அந்த நேரத்தில் குண்டுகளை கட்டி வந்த தற்கொலை படையைச் சேர்ந்தவர் அவரைத் தாக்க முயன்றார்.

ஆனால், அலி ஷா சாமார்த்தியமாகத் தப்பி விட்டார். இந்தத் தாக்குதலில் அங்கு நின்று கொண்டிருந்த 4 பொலிஸாரும், 4 பொது மக்களும் பலியாகினர். 20 பேர் காயமடைந்தனர்.

சிறு காயங்களுக்குள்ளானோர் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலத்த காயமடைந்தவர்கள் பெஷாவரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து மர்தான் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சில பகுதிகளில் மக்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தீவிரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

## அமெ.விமானங்களின் தாக்குதலில் பாகிஸ்தானில் 37 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத்,நவ.03

பாகிஸ்தானின் வட வசீரிஸ்தான் மாவட்டத்திலுள்ள இரு கிராமங்கள் மீது, ஆளில்லா அமெரிக்க விமானங்கள் சனிக்கிழமை மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களில் 37பேர் கொல்லப்பட்டனர் என மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மிர் அலி கிராமத்தில் ஒரு வீடு மீதும், அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கார் மீதும் முதல் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 20 பேர் பலியாயினர். 18 பேர் காயமடைந்தனர் என உள்ளூர் அதிகாரி தெரிவித்தார்.

அரபு தீவிரவாதியான அபு காஷா இராகி இவ்வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வார். இவரைக் குறிவைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. வீடும் காரும் சின்னாபின்னமாகச் சிதைந்து விட்டன. அபு காஷா பலியானாரா? என்ற விவரம் வெளியாகவில்லை என்றும் அவர் கூறினார்.

இரு மணித்தியாலங்களுக்குப் பின்னர், மற்றுமொரு கிராமம் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். 13 பேர் காயமடைந்தனர். இவர்கள் தலிபான், அல்-குவைதா இயக்கங்களைச் சேர்ந்த தீவிரவாதிகளாவர் என்றும் அவர் விவரித்தார்.

# அமெ. துணை ஜனாதிபதி வேட்பாளரின் 'மேக்அப்' செலவு ரூ. 225 இலட்சம்

அமெரிக்கத் துணை ஜனாதிபதித் தேர்தலுக்கான குடியரசுக் கட்சி வேட்பாளர் சாரா பாலின் அம்மையாரின் கவர்ச்சிகரமான தோற்றத்துக்காக அவரது சிகை அலங்காரம், உடை அலங்காரம் ஆகியவற்றுக்காக, இலங்கை நாணய மதிப்பில் 225 இலட்சம் ரூபாய் செலவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது அமெரிக்க ஜனாதிபதித் [illegible] குடியரசுக் கட்சி [illegible] துணை ஜனாதிபதி வேட்பாளராக அலாஸ்கா மாகாண ஆளுநர் சாரா பாலினை ஓகஸ்ட் மாதம் தெரிவு செய்தார்.

குடியரசுக் கட்சியின் பிராதான பிரசாரம் மற்றும் நிதி திரட்டும் மத்திய அமைப்பான குடியரசுக் கட்சி தேசியக் குழு, சாராவின் சிகை அலங்காரம், உடை அலங்காரத்திற்காக செப்ரெம்பர் மாதம் மட்டும் 225 லட்சம் ரூபா செலவிட் [illegible] யார்க்கின் செய்ன்ட் லூயிசியிலுள்ள பிரபல செக்ஸ் பிப்த் அவனியு போன்ற மிகப் பெரிய கடைகளில், சாரா பாலினுக்கு ஆடம்பர உடைகள், கவர்ச்சியான உடைகள், அணிகலன்கள் ஆகியவை வாங்கப்பட்டுள்ளன. சக்ஸ் பிப்த் அவனியுவில் மட்டும் 60 இலட்சம் ரூபாய்க்கு உடைகள் வாங்கப்பட்டுள்ளன.

அதேபோல, மின்னியாபோலிசிலுள்ள நிய் மன் மார்க்கஸ் நிறுவனத்தில் 90 லட்ச ரூபாய்க்கு உடைகள் வாங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றுவரும் ஸ்கந்தசஷ்டி உற்சவத்தில் முருகப்பெருமான் வீதிவலம் வந்து அருள்காட்சி அளிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

## வானொலிகளுக்கும் கட்டுப்பாடு வருகிறது

கொழும்பு, நவ.3

இலங்கையில் எதிர்காலத்தில் வானொலிகள் செயற்பட வேண்டிய விதம் குறித்து புதிய வர்த்தமானி அறிவித்தலொன்று விரைவில் வெளியாகவுள்ளது.

தனியார் தொலைக்காட்சிகள் மீதான புதிய கட்டுப்பாடுகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி அதற்குக் கடும் எதிர்ப்பு உருவாகியுள்ள நிலையிலேயே வானொலிகளைக் கட்டுப்படுத்தும் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளது.

வானொலி நிலையங்கள் தொடர்பான புதிய விதிமுறைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஊடகஅமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)

# ஈழத்தமிழர்களுக்கு இந்திய அரசு செய்துவரும் துரோகத்துக்கு துணை போகிறார் கருணாநிதி

## சிறையிலிருந்தபடியே வைகோ ஆவேசம்



சென்னை, நவ.3

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசோடு சேர்ந்து கொண்டு இந்திய அரசு செய்து வரும் துரோகத்தை மறைக்க தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தந்திர நடவடிக்கை மேற்கொள்கிறார் -என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன், புழல் சிறையில் வைகோ தம்மிடம் கூறியதாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

கடந்த நான்கு ஆண்டு காலமாக இலங்கையில் சிங்கள இனவாத அரசான ராஜபக்ஷ அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்துகின்ற கொடூரமான இராணுவத் தாக்குதலுக்கும் இனப் படுகொலைக்கும் மறைமுகமாகவும் சில நேரங்களில் நேரடியாகவும் இராணுவத் தளபாடங்கள் வழங்கியும் குறிப்பாக வான் படைக்கு உதவும் ராடார்களைக் கொடுத்தும் இந்தியா உதவுகிறது.

வேறு நாடுகளில் இலங்கை ஆயுதங்கள் வாங்குவதற்கு வாய்ப்பாக இதுவரை ரூ. 2,000 கோடி ரூபா வட்டியில்லாக் கடனாகத் தந்தும், இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கியும், பலாலி விமானத் தளத்தை இந்திய அரசின் செலவிலேயே பழுது பார்த்துக் கொடுத்தும், இராணுவத் தாக்குதலுக்கு உதவ இந்திய இராணுவப் பொறியியலாளர்களையும், தொழில்நுட்பப் பிரிவினரையும் அங்கு அனுப்பி வைத்துள்ளது. இந்திய - இலங்கை கடற்படைத் தகவல் பரிமாற்றம் ஒப்பந்தம் செய்தும், பலமுறை இந்தியத் தளபதிகளை இலங்கைக்கு அனுப்பி ஆலோசனைகள் வழங்கியும், மொத்தத்தில் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்தும் யுத்தத்திற்குப் பெரும் துணையாக இயங்கி வருகின்ற துரோகத்தை இந்திய அரசு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செய்து வந்துள்ளது.

### இந்திய அரசின் துரோகத்துக்கு கருணாநிதியும் பொறுப்பாளி

பிரதமர் மன்மோகன் சிங் அரசின் மன்னிக்க முடியாத இந்தத் துரோகத்திற்கு அந்த அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் குறிப்பாக தமிழ்நாட்டில் தற்போது பெரும்பான்மை அரசு நடத்தும் கட்சியும், முதலமைச்சரும் பொறுப்பாளிகள் ஆவார்கள் என்பதால் தமிழ்நாட்டு மக்களின் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் ஆளாக நேரிடும்.

அதனால் அரசியல் ரீதியாகப் பாதகம் ஏற்படும் என்பதனை உணர்ந்து தமிழக மக்களை ஏமாற்றவும் குற்றச்சாட்டுகளிலிருந்து திசை திருப்பவும் ஒரு திட்டமிட்ட கண்துடைப்பு வேலையை - பித்தலாட்ட நாடகத்தை முதலமைச்சர் நடத்திவிட்டார்.

அதுதான் ஒக்ரோபர் 14ஆம் திகதி அவர் நடத்திய பல்வேறு கட்சிகளின் கூட்டத்தில் அரங்கேற்றிய இராஜினாமா அறிவிப்பாகும். அக்கூட்டத்தில் முதல்வர் அறிவித்தவை என்ன?

1. இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு ஈழத்தில் அமைதி திரும்புவதற்கு ஏற்ற நடவடிக்கையை இந்தியப் பேரரசு உடனடியாக எடுத்து நிறைவேற்ற வேண்டும்.

2. இலங்கையில் இரண்டு வாரகாலத்திற்குள் போர்நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும்.

3. இலங்கை அரசுக்கு, இந்திய அரசு ஆயுத உதவியை உடனடியாக நிறுத்திட வேண்டும்.

4. மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்டோருக்கு நேரிடையாகச் சென்றடைய சர்வதேச அமைப்புக்களை மத்திய அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

முதலமைச்சரின் அறிவிப்பு அனைத்து ஏடுகளிலும் பரபரப்பான தீர்மானம் என்றும், இலங்கைக்கு ஆயுத உதவி நிறுத்தாவிடில் - இரண்டு வாரத்தில் போா நிறுத்தத்திற்கு மத்திய அரசு முன்வராவிடில் - தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்றும் செய்திகள் வெளியாயின.

இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகரும் புதுடில்லி வரை வந்து போர் தொடருமென்று கொக்கரித்த வருமான பஸில் ராஜபக்ஷவும் "போரை நிறுத்துமாறு இந்திய அரசு எங்களிடம் சொல்லவேயில்லை. இந்தியப் பிரதமர் அதுபற்றி பேசவேயில்லை" என்று கூறி உண்மை நிலையை அம்பலப்படுத்தி விட்டார். வெளிவிவகாரத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி டில்லியில் இதுபற்றி கூறுகையில் இலங்கையில் போரை நிறுத்தச் சொல்ல முடியாது, போர்நிறுத் தம் கேட்கவும் முடியாது என்று தெரிவித்தார்.

### எந்த மடையனும் நம்பமாட்டான்

இந்திய அரசின் இராஜாங்க இராணுவ அமைச்சர் பல்லம் ராஜூ இன்னும் ஒருபடி மேலே சென்று இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவிகளைத் தொடர்ந்து செய்யும் என்று ஒக்ரோபர் 16ஆம் திகதி சொன்னார்.

பிரணாப் முகர்ஜி கூறும்போது, "ராடார்கள் இலங்கைக்குக் கொடுத்துள்ளோம். அது இந்தியாவின் பாதுகாப்பிற்காக," - என்றார். எந்த மடையனும் இதை நம்பமாட்டான்.

பெரும் அழிவு செய்யும் ஆயுதங்களை நாங்கள் தரவில்லை; சாதாரண ஆயுதங்கள்தான் தந்துள்ளோம் என்றார். இந்தியாவில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி கொடுப்பதை ஒப்புக்கொண்ட பிரணாப் முகர்ஜி இப்படிப் பல நாடுகளுக்கும் பயிற்சி கொடுப்து வழக்கம்தான் என்று நியாயப்படுத்தவும் முயன்றார். அப்படிப் பயிற்சி பெறும் வேறு நாடுகளில் இந்திய வம்சாவளியினரோ இந்திய மண்ணில் தொப்புள் கொடி உறவினர்களோ அந்நாடுகளில் கொல்லப்படுகின்றனரா என்ற கேள்வி சவுக்கடி வீசுவதுபோல் கேட்கிறதே, இதற்கு மத்திய அரசின் பதிலென்ன? முதல்வரின் விளக்கம் என்ன?

தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கம் குறித்து ஆதரவாக கருத்துச்சொல்ல உரிமையுண்டு என்று உச்ச நீதிமன்றத்தில் நான் தொடுத்துள்ள 'ரிட்' மனு மீதான வழக்கில் அதனை ஏற்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது.

ஆனால் இன்று தமிழ்நாட்டில் எங்கள் இயக்கத்தினர் நடத்தும் உண்ணாவிரதத்திற்கும் அனுமதி இல்லை, பொதுக்கூட்டத்திற்கும் அனுமதியில்லையென்று காவல்துறையின் காட்டாட்சி தர்பாரை கட்டவிழ்த்துவிட்டார் தமிழக முதல்வர்.

ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்க அதிகாரத்தை ஏவும் சர்க்காருக்குச சொல்வோம், எங்கள் உரிமைக்குரலை ஒடுக்க முடியாது. பன்மடங்கு வேகத்துடன் எட்டுத்திக்கிலும் அக்குரல் ஓங்கி ஒலிக்கும். நாடெங்கும் நகரங்கள் தோறும், ஊர்கள் தோறும், தெருக்கள் தோறும் எங்கள் குற்றச்சாட்டின் குரல் விஸ்வரூபமெடுக்கும்,- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## ஈழத்தமிழர்களின் படுகொலையைக் கண்டித்து திரைப்படத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம்

சென்னை, நவ.3

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைக் கண்டித்தும், அப்பாவி மீனவர்கள் சுடப்படுவதைக் கண்டித்தும் நாளை மறுதினம் புதன்கிழமை 5ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருக் கிறது.

சம்மேளனத் தலைவர் விஜயன், பொதுச் செயலாளர் உமாசங்கர் பாபு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சம்மேளனத்தைச் சார்ந்த சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சாலிகிராமம் அருணாச்சலம் சாலையில் உள்ள செந்தில் ஸ்டூடியோ அருகில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் உள்ளூர் திரைப்பட, தொலைக்காட்சி படப்பிடிப்புகள் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் ஒப்புதலோடு நடைபெறாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது.

## சிறுபான்மை மக்களுக்கு அதிகாரம் வழங்கும் இலங்கை அரசின் செயற்பாடுகளில் மந்தம்!

### பஸிலிடம் இப்படிக் கூறி விசனித்ததாம் புதுடில்லி

சிறுபான்மை மக்களுக்கு அதிகாரங்களை வழங்கும் செயற்பாடுகள் போதிய வேகத்துடன் முன்னெடுக்கப்படாமை குறித்து இலங்கை அரசிடம் இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

சமீபத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதியாக புதுடில்லி சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவிடமே, இந்திய வெளிவிவகார அமைச்சரும் ஏனைய முக்கிய அதிகாரிகளும் இதுகுறித்து பிரஸ்தாபித்துள்ளனர் என இந்தோ ஆசிய செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகஅதிகாரப் பகிர்வில் ஈடுபடுவது குறித்து கொழும்பு உண்மையான அக்கறை கொண்டிருக்குமானால் அது கிழக்கு மாகாண சபைக்கு மேலும் அதிகாரங் களை வழங்க வேண்டுமெனவும் -

அதேவே[illegible] இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பது சாத்தியமற்றது எனவும் புதுடில்லி பஸில் ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு காண்பதில் இலங்கை உண்மையான அக்கறை கொண்டிருக்குமானால் கிழக்கு மாகாணசபைக்கு பொலிஸ், நிதி, விவசாயம், நீர்ப்பாசனம், காணி போன்ற துறைகளில் முழுமையான அதிகாரத்தை வழங்கவேண்டுமெனவும் -

இதன்மூலம் மாகாணத்திலுள்ள தமிழர்களினதும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களினதும் நாளாந்த வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியுமெனவும் டில்லி குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆட்சிப் பொறுப்பையேற்றுள்ள தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக அமை[illegible] தனது இந்த வேண்டு[illegible] குறித்து புதுடில்லி பகிரங்கமாக எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை.

கிழக்குமாகாணத்தின் தற்போதைய நிர்வாகம் அதிகாரமற்றதாகவே கருதப்படுகின்றது.இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென இந்தியா விரும்புகின்றது.

இது இவ்வாறிருக்க, விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கலாம் என கொழும்பு கருதுவது தவறானது. இதற்கு சாத்தியமில்லை என்றும் இந்தியத் தலைவர்கள் பஸிலிடம் ஆணித்தரமாக சுட்டிக்காட்டியுள்ளனர்.எனவே, இலங்கை அரசு காலம் தாழ்த்தாமல் நம்பகத்தன்மை மிகுந்த அரசியல் யோசனையைமுன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் கிளிநொச்சியைக் கைப்பற்றினால் கூட அதனால் பலன்எதுவும் ஏற்படப்போவதில்லை என ஜனாதிபதியின் சகோதரரிடம் வலியுறுத் தப்பட்டுள்ளதாக இந்தோ ஆசிய செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை திருக்கோவிலில் கடந்த வாரம் ஐந்து தமிழ் இளைஞர்கள் கடத்தல்

## வெள்ளைவான் கும்பல்களின் அட்டூழியம் தொடர்கிறது

திருகோணமலை, நவ.3

திருகோணமலை, திருக்கோவிலில் கடந்த வாரத்தில் மட்டும் ஐந்து தமிழ் இளைஞர்கள் ஆயுதக் குழுக்களால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கத்திடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் எங்கு தடுத்து வைப்பப்பட்டுள்ளனர் என்பது குறித்து எதுவும் தெரியவில்லை எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை திருக்கோயில் பிரதேசத்தில் இராணுவத்தினர் தினமும் தேடுதல், சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் கைதுசெய்யப்படும் இளைஞர்கள் சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்படுகின்றனர் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உறவினர்கள் திருகோணமலை மனித உரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

### ஏழு இளைஞர்களும் விடுதலை

அதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் திருகோணமலை கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்ட தேடுதலில் கைதுசெய்யப்பட்ட ஏழு தமிழ் இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தரைப்படையினரும் கடற்படையினரும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பாரிய சுற்றி வளைப்புத் தேடுதலில் முகமூடி அணிந்த தலையாட்டிகளின் உதவியுடன் மேற்குறிப்பிட்ட ஏழு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து ஏழு இளைஞர்களும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர், சம்பூர் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக குறித்த கலாசார மண்டபத்தில் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஏழு மாவீரர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப் பட்டது. அவற்றில் ஒரு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பதில் முன்னின்று உழைத்தவர் சு.ப. தமிழ்ச்செல்வன்

## ஓராண்டு நினைவில் பா.நடேசன் புகழ் மாலை

கிளிநொச்சி, நவ.3

தமிழீழத் தேசியத் தலைவர் விரும்புகின்ற வகையில் செயலாற்றி மக்கள் நேயப் போராளியாக விளங்கியதுடன், அனைவரினதும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவராகத் திகழ்ந்தவர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் முதலாம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு பா.நடேசன் தெரிவித்துள்ளவை வருமாறு -

எமது விடுதலை இயக்கத்தின் நீண்ட வரலாற்றுப் பயணத்தில் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆற்றிய போராட்டப் பணி அளப்பரியது.

சாவையும் அழிவையும் எமது மக்கள் மீது சுமத்தி அவர்களின் விடுதலை நோக்கிய திசை வழிப் பயணத்தை மாற்றிவிட சிங்கள அரசுகள் முயற்சித்த வேளைகளில் அதற்கு எதிராக உறுதியுடன் போராடியதுடன் மக்களுக்கான அரசியல் பணியை நீண்டகாலம் பொறுப்புடன் ஆற்றிய ஒரு போராளியாக பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் விளங்கினார்.

தனது இளம் வயதில் போராட்டத்தில் இணைந்து துடிப்பான செயல்திறனை வெளிப்படுத்தி தேசியத் தலைவரினதும் போராளிகளினதும் மக்களினதும் அன்பிற்கும் மதிப்புக்கும் பாத்திரமானவராக தனது செயற்காலத்தில் விளங்கினார்.

எமது விடுதலை இயக்கமும் எமது மக்களும் சிங்கள தேசத்தின் அநீதிக்கு எதிராக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஓய்வில்லாது நடத்தி வரும் விடுதலைப் போராட்டப் பயணத்தில் நாம் அவ்வப்போது பெரும் நெருக்கடிகளையும் சோதனைகளையும் சந்தித்த போதெல்லாம் மக்களை ஒன்றுதிரட்டி அவர்களின் பலத்தை ஒருமுகப்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என்பதில் முன்னின்று உழைத்தவர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் - என்றார்.

### தமிழகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பல்வேறு பிரிவினரும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள சூழ்நிலையிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாட்டில் இடம்பெறும் போராட்டங்களை மீள் ஒளிபரப்புச் செய்யவேண்டாமென 'கேபிள்' தொலைக்காட்சி மீள் ஒளிபரப்பு நிறுவனங்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

இந்த எச்சரிக்கையும் மீறி தொடர்ந்தும் அவ்வாறான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்தால், குறித்த நிறுவங்களின் மீள் ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அந்த நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ)

தற்போது தரம் 4இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான
புலமைப் பரிசில் வகுப்பு- 2009
புதிய பிரிவு ஆரம்பம்:- 05.11.2008 (புதன் 3.30மணி)
- யாழ். நகரில் அதி முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்.
- மாதம் இருமுறை பயிற்சிப் பரீட்சை.
- வகுப்பில் 40மாணவர்கள் மட்டும் அனுமதி.
- அனுமதிகள் இம்மாதம் 10ஆம் திகதி வரை.
- அனுமதிக்கு முந்துங்கள்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

### கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர் என்று கூறப்படுகிறது. இந்த விடயத்தில் பஸில் ராஜபக்ஷவிடம் தாங்கள் அதிருப்தி தெரிவித்தனர் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழக முதல்வர் கருணாநிதியிடம் கூறினார் என்று இந்தோ ஆசிய செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

### பிள்ளையான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இத்தாக்குதலால் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. வீட்டின் முற்புறத்திற்கு மட்டும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. அச்சமயத்தில் வீட்டில் அசாத் மௌலானா இருக்கவில்லை. அவருடைய தாயார் மட்டுமே அங்கு இருந்தார் என்றும் கூறப்படுகிறது. (அ-சி)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை அழிக்கக் கூடிய தொழிநுட்ப உதவியை சர்வதேச சமூகத்திடம் இலங்கை கேட்டிருந்தது.

ரஷ்யாவும், செக் குடியரசும் அதனை ஏற்று உதவி வழங்கமுன் வந்துள்ளன. விடுதலைப்புலிகள் வசம் உள்ள செக்.குடியரசுத் தயாரிப்பான(ZLIN-Z) - 143 ரக விமானங்கள் விரைவில் அழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் வசம் ஐந்து விமானங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று வவுனியா விமானத்தளத்தாக்குதலின் பின் அழிக்கப்பட்டிருந்தது. (அ-01)

### வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம்பெற்றிருக்கின்றது.

இராணுவத்தின் 611ஆவது படைப் பிரிவின் மீது விடுதலைப் புலிகளின் அணி ஒன்று தாக்குதல் நடத்தியது. அதற்கு தாங்கள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப்புலிகள் பலத்த இழப்புகளை சந்திருத்திருக்கலாம் என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் படைத்தரப்பு மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப்புலிகளின் உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவருடைய் சடலத்தையும் அவர்கள் விட்டுச் சென்றனர் எனக் கூறப்படும் மைக்ரோ பிஸ்டல் ஒன்றையும், சிடிஎம்ஏ தொலைபேசி ஒன்றையும் படையினர் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இச்சமர் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து இச்செய்தி எழுதப்படும் வரை தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (அ-சி)

### தீர்வுயோசனையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார் என்பது தெரிந்ததே.

புதுடில்லியில் அவர் நடத்திய பேச்சுகளின் போதே இலங்கை அரசு, தனது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கும் திட்டத்தை குறுகிய காலத்துக்குள் - மூன்று மாதத்துக்குள் - பகிரங்கப்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் புதுடில்லித் தரப்பால் அவருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும் விஞ்சியதான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு யோசனையை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக பஸில் ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

தீர்வு யோசனையை இலங்கை அரசு வெளியிடுவதற்கான - திட்டவட்டமான - கால அவகாசம் இதுதான் என்று இந்தியா குறிப்பிடவில்லையாயினும், மூன்று மாதம் என்ற கால அவகாசம் நல்ல பெறுபேறு ஒன்றைக் காட்டுவதற்குப் போதுமானது என இந்தியத் தரப்பினால் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் அறியவருகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி புதுடில்லிக்குச் செல்லவிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்த விவகாரம் குறித்துப் புதுடில்லித் தலைவர்களுடன் நேரில் மனம் திறந்து பேசுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கும் அதேசமயத்தில் -

நாடாளுமன்றைக் கலைத்துத் தேர்தலை நடத்திய பின்னர், தான் சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தின் அடிப்படையில் தமிழர் தரப்புடன் சமாதானப் பேச்சை நடத்தலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.(சி)

### அரியாலையில் மரணமானவர் பல்கலை. மாணவர் என அடையாளம் காணப்பட்டார்

அரியாலை, முள்ளிப் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற சம்பவத்தில் 'சயனைட்' உட் கொண்டு மரணமானதாகக் கூறப்படும் இளைஞன் யாழ். பல்கலைக்கழக மாணவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை புருசோத்மேன் (வயது 25) என்ற பல்கலைக்கழக மாணவன் என அவரது தாயார் அடையாளம் காட்டியுள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை அவரது தாயாரிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் உத்தரவிட்டுள் ளார்.

அதேவேளை- இந்தச் சம்பவத்தில் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞனின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில்யாழ்.ஆஸ்பத்திரியில்வைக்கப்பட்டுள்ளது.

### கதிர்காமத்தில் இருவர் கடத்தல்

அம்பாந்தோட்டை, நவ. 03

அம்பாந்தோட்டை, கதிர்காமம், குக்கல்கட்டுவப் பகுதியில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் இருவர் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

பயிர்ச்செய்கைக்கு சென்ற இருவரையும் இராணுவ சீருடையில் அந்த ஆயுததாரிகள் கடத்திச் சென்றனர் என்று அவர்களது உறவினர்களால் கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு கூட்டப்படவுள்ளது என்றும், இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே இந்தியாவின் பிரதிநிதி பார்வையாளராகக் கலந்துகொள்கின்றார் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-சி)

### வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

இந்தச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் கலந்து கொண்டார் எனவும் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு மற்றும் கூடாரங்கள் உட்பட அவசியமான பொருள்களை விநியோகிக்க இந்தியா தயார் என் அவர் தெரிவித்தார் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட சந்திப்பில் உயர்ஸ்தானிகர் நிவாரணப் பொருள்களை அனுப்புவதற்கான வழி முறைகள் குறித்து ஆராய்ந்தார். இது குறித்து தொடர்ந்தும் ஆராயப்படுகின்றது என இந்திய இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

### தொண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசின் சார்பில் 800 தொன் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்படும் என்றும், தமிழக அரசும் அவ்வாறு சேகரித்து அனுப்பலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் நேரடியாக உதவி செய்யத்தான் போகிறோம். அதையும் எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி மத்திய அரசுடன் தமிழக தலைமைச் செயலாளர் பேசியிருக்கிறார்.

உணவுத்துறை சார்பில் எந்த அளவுக்கு அரிசி வழங்க இயலும் என்றும் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அரசின் சார்பாக மட்டுமல்லாது, தனிப்பட்ட முறையிலும் நிதி வசூல் நடைபெற்று வருகிறது.

கலையுலகைச் சேர்ந்தவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் நிதி அளித்து வருகின்றனர். இதனை அனைவரும் வரவேற்கின்ற நிலையில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்மானங்களை நிறைவேற்ற முழு மனதோடு ஒப்புக் கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இந்த நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போய்ச் சேரும் என்பதற்கு என்ன உறுதி என்று கேள்வி கேட்கிறார்.

இதுகுறித்து, தீர்மானத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.சபை போன்ற தொண்டு நிறுவனங்களின் மூலமாக நிவாரணப் பொருள்கள் அனுப்பப்படும் என்றுதான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, இலங்கை அரசு மூலமாக அனுப்புவோம் என்று குறிப்பிடவில்லை - என்றுள்ளது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org